விலை ரூபா: 15.00 Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 30 செவ்வாய்க்கிழமை (16.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 332

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## யாழில் நேற்று ஆர்ப்பாட்டம்

# அடக்குமுறை அரசுக்கு எதிராக தொடர்ந்து போராடுவோம்

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச சூளுரை



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் மக்கள் விரோத ஆட்சியே நடைபெறுகிறது. மக்களின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. உரிமைகளுக்காகவும் உண்மைகளுக்காகவும் போராடுகின்ற மக்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காக நாங்கள் எப்போதும் குரல் கொடுப்போம். அடக்குமுறை அரசாங்கத்துக்கு எதிராக நாம் தொடர்ந்து போராடுவோம். இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தின் போது சரணடைந்த எவரும் கொல்லப்படவில்லை

### -மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா

(கொழும்பு)

புலிகளுடனான இறுதிக் கட்ட யுத்தத்தின்போது வெள்ளைக் கொடியுடனோ,அன்றி வெறுங்கையுடனோ படையினரிடம் சரணடைந்த எவரையும் பாதுகாப்புப் படையினர் கொலை செய்யவில்லை என்று 58ஆம் படைப் பிரிவின் முன்னாள் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பில் கொழும்பு நீதிமன்றில் நடைபெறும் வழக்கில் நேற்று சாட்சியமளிக்க சவேந்திர சில்வா அழைக்கப்பட்டிருந்தார். அதன்போது அரசதரப்பு வழக் (20ஆம் பக்கம் பார்க்க)

## வேலணை-அராலிச் சந்தியில் மினிபஸ் குடைசாய்ந்தது

### இருபது பேர் காயமுற்றனர்

(வேலணை)

வேலணை அராலிச் சந்தியில் பயணிகள் மினிபஸ் ஒன்று லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகி குடைசாய்ந்ததில் இருபது பயணிகள் காயமடைந்தனர்.

இச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஊர்காவற்றுறை-யாழ்ப்பாணம் '780' பயணிகள் சேவையில் ஈடுபட் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டத்தில் கூழ் முட்டை, கல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

ஜே.வி.பியினரால் நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது கற்கள் மற்றும் கூழ் முட்டைகள் வீசப்பட்டுள்ளன. ஜேவியின் நாம் இலங்கையர் எனும் அமைப்பினர் காணாமல் போனோர் மற்றும் கைது செய்யப்பட்வர்களை விடுவிக்கக் கோரியும் அவர்களின் பெயர் விபரங்களை வெளியிடக் கோரியும் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

நேற்று நண்பகல் யாழ். மத்திய பஸ் நிலையத்திற்கு முன்பதாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ள நிலை (20ஆம் பக்கம் பார்க்க)

## நுணாவிலில் விபத்து இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு துர்க்கையம்மன் கோவில் பகுதியில் நேற்று இரவு 7.30 மணியளவில் மோட்டார் சைக்கிளும் லொறியும் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இவ்விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த (19ஆம் பக்கம் பார்க்க)



நாம் இலங்கையர் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று யாழ். நகரில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் காணாமல்போனோரின் உறவினர்கள்...

## யுத்த காலத்தில் நடந்த துயரத்திற்காக தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன்

### ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் தலைவர் சி.ஆர். டிசில்வா யுத்த காலத்தில் தமிழர்கள் அனுபவித்த துயரங்களுக்காக பகிரங்க மன்னிப்பு கோர விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

யுத்த காலத்தின்போது மக்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் மற்றும் மக்கள் மீது திணிக்கப்பட்ட அழுத்தங்கள் போன்றவற்றை சாட்சியங்களாக மக்களிடமிருந்து பெற்று அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதியால் (20ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த நீதிமன்றமானது அங்கீகரிக்கப்பட்ட நீதிமன்றா?

### உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆராய்வு

(கொழும்பு)

யுத்த நீதிமன்றத்தை அங்கீகரிக்கப்பட்ட நீதிமன்றமாக ஏற்றுக் கொள்வதா என்பது தொடர்பில் ஐவர் அடங்கிய நீதியரசர் குழுவொன்று ஆய்வு நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் அமைப்பிற்கு அமைய யுத்த நீதிமன்றத்தை ஓர் நீதிமன்றமாக ஏற்க முடியுமா என ஆராயப்படவுள்ளது. உச்ச நீதிமன்றத்தைச் சேர்ந்த ஐவர் அடங்கிய நீதியரசர் குழாம் இந்த ஆய்வினை நடத்த உள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)




மக்கள் விடுதலை முன்னணியினரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்று ஆர்ப்பாட்டமும் கையெழுத்திடும் நிகழ்வும் நடைபெற்றது. நாம் இலங்கையர் என்ற பெயரில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான சுனில் ஹந்துன்நெத்தி, ரில்வின் சில்வா உள்ளிட்ட மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் நடைபெற்ற இந்த போராட்டத்தில், காணாமற்போனோரின் உறவினர்களும் கலந்து கொண்டு தங்கள் பிள்ளைகளையும் உறவினர்களையும் மீட்டுத் தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தின் படங்களைக் காணலாம்.

படங்கள்: கரன்

# தமிழர் தொடர்பில் சேபியர் போல சிங்கள சமூகம் நடந்துகொள்கிறது

## அமெரிக்க எழுத்தாளர் விபரிப்பு

(நியூயோர்க்)

யூகோஸ்லாவாக்கியாவின் பெரும்பான்மை இனமான சேபியர்கள் போலவும், ஈரானில் உள்ள சியாற்றிஇன மக்களைப் போலவும், சிறுபான்மை தமிழினத்தின் மீது அதிக இனத்துவேசம் கொண்டவர்களாக சிங்களச் சமூகம் உள்ளது என அமெரிக்காவின் வெளி விவகார கொள்கை எழுத்தாளர் றொபேட் டி கப்லன் தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரப் பிராந்தியமும், அமெரிக்காவின் எதிர்கால ஆளுமையும் என்ற தலைப்பில் அவர் எழுதிய புத்தகத்தில் மேலும் தெரிவிக்கபட்டுள்ளதாவது,

இந்துசமுத்திரப்பிராந்தியத்தின் பூகோள அரசியலில் இலங்கை முக்கிய பங்கு வகிக்கின்றது.

உலகம் என்ன நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்பதை பர்மாவைக் கொண்டு தீர்மானிக்கலாம்.

இந்தோனேசியாவும் உலக அரசியலில் நெருக்கடிகளைக் கொடுத்துள்ளது.

21 ஆவது நூற்றாண்டில் உலகின் பார்வை இந்துசமுத்திரப் பிராந்தியத்தை நோக்கி குவிந்துள்ளது.

அமெரிக்கா தனது ஆளுமையை தக்கவைப்பதற்கும் அது அவசியமானது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# எஸ்.எல்.ஐ.ஏ.ரி.பட்டமளிப்பு விழா யாழ்.மாணவர்கள் 252 பேர் பட்டம் பெறுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தைச் சேர்ந்த 252 பேர் பல்வேறு துறை ரீதியாக இன்று பட்டம் பெறுகின்றனர்.

இதில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டத்தினை 171 பேரும் உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா ((HNDM)பட்டத்தினை 32 பேரும் உயர்தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா (HNDIT) பட்டத்தினை 13 பேரும் உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா பட்டத்தினை (HN - DBS) 11 பேரும் பெறுகின்றனர்.

இதில் ஏனைய உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுடன் ஒப்பிடும்போது யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தை சேர்ந்தவர்கள் பெருமளவு மாணவர்கள் பட் டம் பெற்று வெளியேறுவது குறிப்பிடத் தக்கது.

மேலும் இன்று பட்டம் பெறுபவர்களதும் மற்றும் நிறுவனம் தொடர்பான தகவல்கள் மற்றும் கற்கைநெறி தொடர்பான தகவல்களை யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்க www.jatia-lumni.org என்ற இணையத்தளத்தின் ஊடாகவும் அறிந்து கொள்ள முடியும் என பழைய மாணவர்சங்கச் செயலாளர் வி.தயாபரன் தெரிவித்துள்ளார். (ந-5)

# பிள்ளையானிடம் பொலிஸார் இரண்டு மணிநேர விசாரணை

(மட்டக்களப்பு)

கிழக்குமாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் பொலிஸார் இரண்டு மணி நேரம் விசாரணை நடத்தியுள்ளனர்.

மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் சிவகீதா பிரபாகரனின் இல்லத்தில் மாநகரசபை உறுப்பினர்கள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

முதலமைச்சரின் உத்தியோக பூர்வ இல்லத்துக்குச் சென்ற பொலிஸார் இரண்டு மணித்தியாலங்கள் விசாரணை நடத்தி வாக்கு மூலங்களை பதிவு செய்தனர்.

மட்டக்களப்பு மாநகர சபையைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் தன் மீது தாக்குதல் நடத்திய போதும் தாம் பதில் தாக்குதல் நடத்தவில்லை என பிள்ளையான் வாக்கு மூலத்தில் தெரிவித்தார்.

மாகாண சபை உறுப்பினர் பிரசாந்த் பூபாலபிள்ளையிடமும் பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர்.

மாநகர சபை உறுப்பினர்களான ஆர்.பிரபாகரன் அருச்சுலிங்கம் ஆகியோர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர்கள் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட கடைத் தொகுதி பங்கீடு தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடே இந்த கைகலப்பிற்குக் காரணமென குறிப்பிடப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# பாராட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யா/கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்களை பாராட்டும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் இ.ரவிச்சந்திரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கொமர்ஷல் வங்கியின் முகாமையாளர் வி.குருபாதம் கலந்து கொள்ளவுள்ளார். (ந-5)

# காணாமல் போனோர் தொடர்பில் யாழில் 500 முறைப்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனோர் தொடர்பில் வடக்கில் 500 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்துள்ளது. குறிப்பாக கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் குறித்து அதிகளவுமக்கள்முறைப்பாடு செய்துள்ளனர்.

போர் காலத்தில் காணாமல் போதல் சம்பவங்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பற்றிய தகவல்கள் வெளியிடப்படாமை, அரசாங்கத்திடம் சரணடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் பற்றிய தகவல்களை வெளியிடாமை போன்ற பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், மானிப்பாய், வல்வெட்டித்துறை, கோப்பாய், நெல்லியடி உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இவ்வாறான முறைப்பாடுகளை செய்துள்ளனர். (ந-5)

# காரைக்காட்டில் இன்று அடிக்கல் நாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபையின் திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டத் திற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று முற்பகல் 11.00 மணியளவில் நல்லூர் பிரதேச செயலாளர் மே.சாந்தசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் ஜீ. ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-7)

# சிறுப்பிட்டி அ.த.கவில் மொழிவிருத்தி முகாம்

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் மொழி விருத்தி முகாம் நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் என்.மகேந்திர ராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்விவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வை.ரவீந்திரனும், சிறப்பு விருந்தினராக யாழ்.வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் பூ.குகதாஸனும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ந-7)

# வெலிக்கடைச் சிறைச்சாலையில் மேலுமொரு தாக்குதல் சம்பவம்

## புலனாய்வு அதிகாரிகள் காயம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் பெண்கள் பிரிவைச் சோதனையிடச்சென்ற சிறைச்சாலை புலனாய்வு அதிகாரிகள் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். நேற்று முன்தினம் நள்ளிரவை அண்மித்த சமயம் இச்சம்பவம் இடம் பெற்றது.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் பெண்கள் பிரிவில் தற்போதைக்கு சுமார் 400 பெண் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை விசேட சோதனைக்குட்படுத்த நேற்றுமுன்தினம் இரவு சிறைச்சாலை புலனாய்வு அதிகாரிகள்திடீர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஆயினும் குறித்த சோதனை நடவடிக்கை தொடர்பில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம், சிறைச்சாலை பணிப்பாளர், பிரதான சிறை அதிகாரிகள் ஆகியோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

சோதனை மேற்கொள்ளச் சென்ற குழுவில் 30 ஆண்களும் பெண்கள் ஐவரும் இருந்ததே கைதிகளின் தாக்குதலுக்கான காரணம் என்று தெரிகிறது.

கைதிகள் மலம், சிறுநீர் என்பவற்றைக்கொண்டு அதிகாரிகளை தாக்கியுள்ளதுடன் பெண்கைதிகளின் மூர்க்கமான தாக்குதல்களிலிருந்து அதிகாரிகளை தப்பவைப்பதற்கும் கலகத்தை கட்டுப்படுத்துவதற்கும் சிறைச்சாலை அதிகாரிகள் பெரும் போராட்டம் ஒன்றை நடத்த வேண்டியிருந்ததாக சிறைச்சாலை வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது. (ஸ்ரீ-2)

# ஒளி விழா

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் ஒளி விழா நிகழ்வுகள் இன்று காலை 10 மணிக்கு கல்லூரியின் கிறிஸ்தவ மன்றத்தலைவர்தேகனிஸ்ரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் வண.பிதா ஜெ.ஜெயரட்ணம், சிறப்பு விருந்தினராக அருட்தந்தை வின்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-7)

# வழிகாட்டல் கருத்தரங்கு

(கோப்பாய்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 2011 ஆம் கல்வியாண்டிற்கான ஆங்கிலப் பாடநெறித் தெரிவிற்கான இலவச வழிகாட்டற் கருத்தரங்கு இன்று பி.ப 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் இவ்வழிகாட்டலில் பங்குபற்றி பயன்பெறுமாறு கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (ந-7)

# இரத்ததான நிகழ்வு

தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு தெல்லிப்பழை புனர்வாழ்வுப் பொறுப்பதிகாரி மேஜர் சுரவீர தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க கலந்துகொள்வார்.

இதில் 50 பேர் இரத்ததானம் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

ஆனந்தி திருமண சேவை

மணமகள் வேண்டும்

டாக்டராக (MBBS) பணியாற்றும் உத்தராடம் 3ம் பாதம் கிரக பாவம் 27 1/4, 1972ல் பிறந்தவர். 12ல் ஆட்சிச் செவ்வாயுடையவருக்கு மணமகளை தேடுகின்றோம். அஞ்சல் வழி, நேரடியாக,தொலைபேசி 0212228708 மூலம் தொடர்பு முகவரி: V.A. சிவராசா (ஜோதிடர்) 56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (2879)

செல்லா சினிமா(நாதன்ஸ்)




காட்சி நேரம்:- 10.30,2.30,6.30,9.30

# இன்று ஒரு தகவல்

## போதுமென்ற மனம்

ஒரு ஊரில் ஒரு பெரிய மனுஷன் இருந்தார். வசதியில் தான் பெரிய மனுஷனே தவிர , குணத்தில் அப்படியில்லை. யாருக்கும் ஒரு பைசா கூட கொடுக்கமாட்டார். மகா கஞ்சப் பிரபு.

மற்றவர்கள் நன்றாக இருந்தால் அதை இவரால் தாங்கிக் கொள்ள முடியாது. பொறாமைப்படுவார். அவருடைய வீட்டுக்கு எதிரில் ஒரு ஏழை இருந்தார்.

இவர் மிகவும் நல்லவர். மற்றவர்கள் கஷ்டப்பட்டால் அதை இவரால் தாங்கிக் கொள்ள முடியாது. தான் கஷ்டப்பட்டாலும் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நினைப்பவர்.

ஒருநாள் ஒரு சந்நியாசி அந்த ஊருக்கு வந்தார்.

அந்தப் பெரிய மனுஷனின் வீட்டுக்கு முன்னால் போய் நின்று கதவைத் தட்டினார்.

கதவைத் தட்டிய சத்தம் உள்ளேயிருந்த அந்தப் பெரிய மனுஷனின் காதில் விழுந்தது. இருந்தாலும் அவர் கதவைத் திறக்கவில்லை.

''கதவைத் திறந்தால் யாராவது ஏதாவது கேட்பார்கள். கொடுக்க வேண்டியிருக்கும்'' என்று நினைத்துக் கொண்டு அப்படியே இருந்து விட்டார்.

சந்நியாசி கொஞ்ச நேரம் நின்று பார்த்தார். யாரும் கதவைத் திறக்கவில்லை என்றவுடன் எதிர் வீட்டுக்குப் போய் விட்டார். அது தான் அந்த ஏழையின் வீடு.

கதவைத் தட்டினார். உடனே அந்த ஏழையும் அவருடைய மனைவியும் கதவைத் திறந்தனர்.

சந்நியாசியைப் பார்த்தார்கள். உள்ளே கூப்பிட்டு சாப்பாடு கொடுத்தார்கள். சந்நியாசி திருப்தியாக சாப்பிட்டார்.

சாப்பிட்டு விட்டுப் புறப்படும் சமயத்தில் அவர்களைப் பார்த்து, "எனக்கு ரொம்ப திருப்தியாக இருந்தது. உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஏதாவது 3 வரம் கேளுங்கள் தருகிறேன்" என்றார்.

அதற்கு அந்த ஏழையும் அவருடைய மனைவியும்,

"உங்களுடைய அன்புக்கு நன்றி சுவாமி. இருந்தாலும் எங்களுக்கு வரம் எதுவும் தேவையில்லை. ஏனென்றால் இப்பொழுதே நாங்களிருவரும் சந்தோஷமாகத்தான் இருக்கிறோம்" என்றார்கள்.

இருப்பதைக் கொண்டு திருப்தியடையும் ரகம் அவர்கள். சரியென்று சொல்லி சந்நியாசி புறப்பட்டார். இருந்தாலும் அவரால் சும்மா போக முடியவில்லை.

இவர்களுக்கு ஆசீர்வாதம் பண்ணினார். உடனே அந்த ஏழையின் வீடு ஒரு மாளிகையாக மாறியது. எல்லா வசதியும் வந்து விட்டது.

அடுத்த நாட்காலையில் அந்த பெரிய மனுஷன் தன் வீட்டுக் கதவைத் திறந்து பார்த்தார். ஒரே ஆச்சரியம்!

எதிரில் வழக்கமாக பார்க்கும் குடிசையைக் காணவில்லை. அது மாளிகையாக மாறியிருந்தது. இதற்கு என்ன காரணம் என்று விசாரித்தார்.

விபரத்தைப் புரிந்து கொண்டார்.

உடனே அந்த சந்நியாசியைத் தேடிக் காரை எடுத்துக் கொண்டு கிளம்பினார்.

ஒரு காட்டுக்குள் அவர் உட்கார்ந்திருந்தார். அவருடைய காலில் போய் விழுந்தார்.

''என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் சுவாமி. ஏதோ தெரியாத்தனமாக அப்படி நடந்து கொண்டேன்'' என்றார்.

''இப்பொழுது உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார் சந்நியாசி.

''வேறொன்றும் வேண்டாம். அந்த ஏழைக்கு கொடுப்பதாக சொன்ன அந்த 3 வரங்களை மட்டும் எனக்கு கொடுத்தால் போதும்'' என்றார்.

"சரி, கொடுக்கிறேன். ஆனால் ஒரு விடயம். உனக்கு என்ன வேண்டுமென்று நீ முதல் மூன்று தடவை எதை நினைக்கிறாயோ அது அப்பொழுதே கிடைத்து விடும்'' என்று சொல்லி அனுப்பி விட்டார் சந்நியாசி.

சரி என்று வரத்தை வாங்கிக் கொண்டு அந்த பெரிய மனுஷன் உற்சாகமாக காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

வழியில் சகதியில் கார் மாட்டிக் கொண்டது.

"நமக்கு வரம் கிடைத்த விபரத்தை சீக்கிரமாக போய் ஊர் முழுவதும் சொல்லலாம் என்று நினைத்தால் இடையில் இந்தக் கார் இப்படி மக்கர் பண்ணுகிறதே. இந்தக்கார் இருந்தாலும் ஒன்று தான். எரிந்து போனாலும் ஒன்றுதான்" என்று நினைத்தார். அவ்வளவு தான்! வாங்கிய வரம் வேலை செய்ய ஆரம்பித்தது. கார் அப்படியே தீப்பிடித்து எரிந்து சாம்பலாகி விட்டது. வாங்கிய முதல் வரம் தீர்ந்தது.

"சரி, பரவாயில்லை. இன்னும் இரண்டு வரம் மீதியிருக்கிறது. பார்க்கலாம்'' என்று நினைத்து நடந்தே வீட்டுக்குப் புறப்பட்டார்.

உச்சி வெயில்! வேர்க்க விறுவிறுக்க நடந்து வந்து கொண்டிருந்தார். சரியான தாகமாக இருந்தது. தண்ணீர் கிடைக்கவில்லை. மனைவியை நினைத்தார்.

"நான் இப்படிகொதிக்கிற வெயிலில் நடந்து கொண்டிருக்கிறேன். அவள் மட்டும் ஆனந்தமாக ஏ.சி. பங்களாவுக்குள் உட்காந்திருப்பாள். என் கஷ்டம் அவளுக்கு எங்கே புரியப் போகிறது." அந்தப்பங்களா பற்றி எரிந்தால் தான் அவளுக்குப் புரியும்?" என்று நினைத் தார்.

அவ்வளவுதான்! இரண்டாவது வரம் வேலை செய்தது. பங்களா பற்றி எரிந்தது. மனைவிக்கு தீக்காயம். அதை நேரில் பார்த்தார்.

"இப்பேற்பட்ட கஷ்டத்தை பார்ப்பதற்கா கடவுள் கண்ணைக் கொடுத்தார்? இந்தக் கண் இருந்து என்ன பிரயோசனம் என்று நினைத்தார். அவ்வளவு தான்! மூன்றாவது வரமும் வேலை செய்ய ஆரம்பித்தது. பார்வை போய் விட்டது.

இந்தக்கதையில் இருந்து ஒரு விடயத்தைக் கவனித்தீர்களா?

வரம் வாங்கியும் அது அந்தப் பெரிய மனுஷனுக்கு நல்ல விதமாக பயன்படவில்லை. அதற்கு என்ன காரணம்?

பொறாமை–சுயநலம்–முன் கோபம் எல்லாம் தான். இந்த மூன்று குணமும் இருந்தால் மற்றவர்கள் நன்மை செய்தாலும் அது நமக்கு நல்லவிதமாக உபயோகப்படாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கைவிடப்பட்ட பொருட்களை மீள எடுத்து வருவதற்கும் பார்வையிடுவதற்கும் மக்களை அனுமதிக்க வேண்டும்

## மேஜர் ஜெனரல் இராஜகுருவிடம் விஜயகலா எம்.பி கோரிக்கை

வன்னியில் யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த மக்கள் தம்மால் கைவிடப்பட்ட பொருட்களை சென்று பார்வையிடுவதற்கும் அவற்றை மீள எடுத்து வருவதற்கும் படையினர் உரிய அனுமதியினை வழங்க வேண்டும். யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது மீள்குடியேறியுள்ள நிலையில் அவர்களுக்கு தேவையான உதவிகளை இராணுவத்தினர் மேற்கொள்வது அவசியம் என்று இராணுவத்தின் கிளிநொச்சி மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன ராஜகுருவை சந்தித்து பேசிய யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரணைமடுவிலுள்ள இராணுவ கட்டளை தளத்தில் மேஜர் ஜெனரல் ராஜ குருவை பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த பேச்சுவார்த்தையின் போது யுத்தத்தின் போது இடம் பெயர்ந்த கிளிநொச்சி மாவட்ட மக்கள் முல்லை த்தீவுப் பகுதிகளில் தமது வாகனங்கள் மற்றும் பொருட்களை கைவிட்டு அகதி முகாம்களுக்கு சென்ற நிலையில் தற்போது மீளக்குடியேறியுள்ளனர். இவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சென்று தமது பொரு ட்களை பார்வையிட்டு எடுத்து வருவதற்கு படையினர் அனுமதி வழங்கவில்லை. பாதுகாப்பு அமைச் சுக்கு இதற்கான அனுமதி கோரி விண்ணப்பித்த போதிலும் இத்த கைய அனுமதி தமக்கு கிடைக்கவில்லையென்று பொது மக்கள் பலரும் எம்மிடம் முறைப்பாடு செய்துள்ளனர்

எனவே இந்த மக்கள் தமது பொருட்களைச் சென்று பார் வையிடவும் அவற்றை மீளவும் தமது வீடுகளுக்கும் எடுத்து வரவும் இராணுவத்தினர் உரிய அனுமதிகளை வழங்க வேண் டும். துன்பப்பட்ட மக்களுக்கு இத்தகைய அனுமதி வழங்கப் படுவது அவசியமாகும் என்று எம்.பி. மேஜர் ஜெனரல் இரா ஜகுருவிடம் கோரிக்கை விடு த்தார்.

இதைன விட முரசு மோட்டை, கண்டாவளை பகுதிகளில் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கட்டாக்காலி மாடுகளினால் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். கட்டாக்காலி மாடுகள் வயல் நிலங்களை மோசமாக சேதமாக்கி வருவதாக விவ சாயிகள் எம்மிடம் முறைப்பாடு செய்துள்ளனர். எனவே இந்த மாடுகளை பிடித்து வேறு இடங்களுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்டாக்காலி மாடுகளுக்கு உரி மையாளர்கள் இருப்பின் அவற்றை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இதனைவிட வட்டக்கச்சியில் அமைந்துள்ள சோதி விநாயகர் ஆலயம் மற்றும் மாணிக்கபிள்ளையார் ஆலயம் ஆகியவற்றின் மூல விக்கிரகங்கள் உடையார் கட்டுப் பகுதியிலுள்ள ஆலயமொன்றில் யுத்த இடம் பெயர்வின் போது வைக்கப்பட்டுள்ளன. அந்த விக்கிரங்களை மீளவும் ஆலயத்திற்கு எடுத்து வர அனுமதிக்க வேண்டும்.

இதே போல் வட்டக்கச்சி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் மூல விக்கிரகமும் வெள்ள முள்ளிவாய்க்கால் பகுதியிலுள்ள ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அதனையும் ஆலயத்திற்கு எடுத்து வர நடவ டிக்கை எடுக்க வேண்டும்என்றும்எம்.பி. கேட்டுக்கொண்டார்.

அத்துடன் புனர்வாழ்வு முகாமிலிருந்து விடுவிக்கப்படும் இளைஞர் –யுவதிகள் வாரம் ஒரு தடவை இராணுவ முகாம்களுக்கு சென்று கையெழுத்து இட வேண் டிய நிலை காணப்படுகிறது. இதனால் அவர்கள் மத்தியில் அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த நடைமுறையிலும் தளர்வு போக்கு கடைப் பிடிக்கப்பட வேண்டும். கிளிநொச்சி கந்த சுவாமி கோவில் மடத்தில் படையினர் தங்கியுள்ளனர். இந்த மடத்தினையும் ஆலயத்திற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து வட்டக்கச்சி பகுதியிலுள்ள சோதி விநாயகர் ஆலயம் மற்றும் மாணிக்க பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றின் மூல விக்கிரகங்களை உடையார் கட்டுப் பகுதிக்கு சென்று எடுத்து வருவதற்கான அனுமதியினை மேஜர் ஜெனரல் இராஜகுரு வழங்கினார்.

முரசுமோட்டை பகுதியில் நெல் வயல்களை சேதமாக்கி வரும் கட்டாக்காலி மாடுகளைப்பிடித்து வேறு இடங்களுக்கு கொண்டு செல்லவும் மாடுகள் இல்லாதவர்களுக்கு மாடுகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்குமாறு இராணுவ அதிகாரிகளுக்கு இராஜகுரு உத்தரவு பிறப்பித்தார். (ஸ்ரீ)

# இராசி பலன்

16.11.2010

(ஐப்பசி 30, செவ்வாய்க்கிழமை)

தசமி பிற்பகல் 5.18 மணிவரை

பூரட்டாதி பின்னிரவு 12.23 மணிவரை

இராகுகாலம் 3.07-4.37 மணிவரை

சுபநேரம் 10.37-12.07 மணிவரை

**மேடம்** வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், தூரதேசப் பயணம் மேற்கொள்ள போட்ட திட்டம் நிறைவேறலாம், அம்பிகை வழிபாடு இன்பம் தரும்.

**இடபம்** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், பொருட் சேர்க்கைக்கு அஸ்திவாரமிடுவீர்கள், தூரதேசச் செய்தியால் உற்சாகமடைவீர்கள்.

**மிதுனம்** மங்கையரால் ஏற்பட்ட மனக்கலக்கம் மாறும், விட்டுப்போன தொடர்புகள் மீண்டும் வந்து சேரும், முன்னோர் சொத்துக்களிலிருந்த மனஸ்தாபங்கள் விலகும், பிரயாண நன்மையுண்டு.

**கடகம்** சக்தி வழிபாட்டால் சங்கடங்கள் தீரும் நாள், விலையுயர்ந்த பொருட்களை கவனமாகக் கையாள்வது நல்லது, பிறருக்காக பொறுப்புச் செல்வதை தவிர்ப்பது நல்லது, உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**சிங்கம்** உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள், வாழ்க்கைத்துணை வழியே வரவு வந்து சேரும், பயணத்தால் அலைச்சல் அதிகரித்தாலும் ஆதாயமும் கிடைக்கும், திருமணப் பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும்.

**கன்னி** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், பல நாட்களாக வசூல் செய்யாமலிருந்த பணம் திடீரென வசூலாகலாம்,தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**துலாம்** வளர்ச்சி கூடும் நாள், உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரும், பொருளாதார முன்னேற்றத்திற்கு பெண்வழி ஒத்துழைப்பு கிட்டும்.

**விருச்சிகம்** சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் இலாபம் கிடைக்கும், வாகனயோகமுண்டு, பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பால் பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், வியாபார விரோதம் விலகும்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவம் நடைபெறும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், குடும்பத்தில் சுகங்களும், சந்தோசமும் அதிகரிக்கும், பணவரவு முன்னேற்றகரமாக அமையும்.

**கும்பம்** பலமணி நேரம் செலவு செய்து சில வேலைகளை மட்டும் நிறைவேற்றுவீர்கள், பெரியோரின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், இறை வழிபாட்டில் இனிமை காண வேண்டிய நாள்.



**மீனம்** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், உத்தியோகத்தில் உடன் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மாலை நேரம் மகிழ்ச்சிகரமான பயணமொன்றை மேற்கொள்வீர்கள்.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| மரக்கறி வகைகள் | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 80 | 60 |
| தக்காளி | 100 | 100 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 40 | 40 |
| கோவா | 60 | 60 | 70 |
| கரட் | 60 | 80 | 60 |
| பூசணி | 40 | 40 | 50 |
| புடோல் | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 40 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 110 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 110 | 100 | 70 |
| பாகற்காய் | 160 | 160 | 130 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 60 |
| பயற்றங்காய் | 70 | 100 | 150 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 70 | 60 | 110 |
| கறிமிளகாய் | 100 | 140 | 100 |
| முருங்கைக்காய் | 300 | -- | 150 |
| போஞ்சி | 120 | 120 | -- |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | 50 |
| கீரை – 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 40 |



யாழ்.பல்கலைக்கழகத்தின் வருடாந்த ஆய்வு மாநாடு நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முகலிங்கன், இந்தியாவின் திருச்சிராப்பள்ளி பல்கலைக்கழக பேராசிரியர் ரி.மொரிஸ் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# நீச்சல் தடாகத்தை திறக்க ஜனாதிபதி மகிந்த ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் செல்வார்!

## மாணவர்களை அடக்க இராணுவம் குவிப்பு

(கொழும்பு)


ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ச நீச்சல் தடாகத்தை திறந்து வைக்கும் நிகழ்வுக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வருகை தரவுள்ள நிலையில், மாணவர்கள் அதனை எதிர்த்து வைபவத்தை பகிஷ்கரிக்கும் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளனர்.

ஆயினும் மாணவர்களின் எதிர்ப்பை அடக்கும் பொருட்டு சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான இராணுவத்தினர் அப்பகுதியைச் சுற்றிலும் நிலைகொள்ள வைத்துள்ளதாக மாணவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் 17 பிக்கு மாணவர்கள் உள்ளிட்ட 82 மாணவர்களின் அனுமதி இரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையில், அதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் வெறுமனே பிரசார நோக்கில் ஜனாதிபதியின் வருகை அமைந்திருப்பதாக மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதற்கிடையே ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துக்கு அருகில் குவிக்கப்பட்டிருக்கும் படையினர், இளைஞர்களை அந்தப் பகுதியில் கூடி நிற்க விடாமல் அப்புறப்படுத்தத் தொடங்கியுள்ளதுடன், பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் உறுப்பினர்கள் என்று சந்தேகப்படுவோரை குறித்த பிரதேசத்திலிருந்து அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாக தெரியவருகின்றது.

அத்துடன் அரசாங்கத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர், யுவதிகளின் பெயரை வெளியிடக் கோரி நாம் இலங்கையர் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட கையெழுத்து வேட்டை நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்றிருந்த பல்கலைக்கழக மாணவர்களை



கைது செய்த பொலிசார் அவர்களின் வாக்குமூலத்தைப் பதிந்த பின் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பஸ்ஸின் சாரதியும் கடுமையாக அச்சுறுத்தப்பட்டுள்ளதுடன், மாணவர்களை பஸ்ஸிற்குள் வலுக்கட்டாயமாக ஏற்றி, ஆயுதந் தாங்கிய பொலிசார் பஸ்ஸின் உள்ளேயும் வாசலிலும் நின்று யாழ்ப்பாணத்திற்கு வெளியில் கொண்டு வந்து விட்டுச் சென்றுள்ளதாக குறித்த மாணவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

# ஜே.வி.பி. குழுவினர் மீதான தாக்குதல் அரச பயங்கரவாதத்தின் ஒரு வடிவம்

## மனோ கணேசன் கண்டனம்

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதனின் வீட்டில் பேச்சுவார்த்தைகள் நடத்திக்கொண்டிருந்த ஜே.வி.பி. எம்.பி சுனில் ஹந்துன்நெத்தி உள்ளிட்ட குழுவினர் மீது நடத்தப்பட்டுள்ள வன்முறை தாக்குதல் அரச பயங்கரவாதத்தின் ஒரு வடிவமாகும். இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும், தெரிவிக்கையில்,

ஜே.வி.பியை விரும்பாத தமிழ் மக்கள் நடத்திய தாக்குதல் என்று வர்ணிப்பது மக்களை முட்டாளாக்கும் நடவடிக்கையாகும். அரச பயங்கரவாதம் தமிழ் மக்களுக்கு புதிய ஒரு விடயம் அல்ல. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களுக்கு இது பழகிப்போன விடயமாகும்.

அரச பயங்கரவாதத்தின் மூலமான அனுபவங்களை தமிழ் மக்கள் மறக்க முடியாது. 1971லும், 1989லும் அரச பயங்கரவாதத்தின் தாக்கங்களை அனுபவித்த ஜே.வி.பி சமீபகாலமாக அவற்றை மறந்திருந்தது. தமிழ் மக்கள் உச்சக்கட்ட துன்பங்களை அனுபவிக்கும் போது, அவை ஜே.வி.பியினருக்கு வலித்திருக்கவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

எனினும் இந்த கசப்பான உண்மையை மறந்துவிட்டு ஜே.வி.பி உறுப்பினர்களுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களை மிக வன்மையாக கண்டிக்கின்றோம்.

ஜனநாயக மக்கள் முன்னணியையும், தமிழ் மக்களையும் பொறுத்தவரையில் நாம் எல்லாவிதமான வன்முறைகளையும் நிராகரிக்கின்றோம். வன்முறைகள் மூலமாக ஜனநாயகத்தின் குரல்வளை நசுக்கபடுவதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் வன்மு



றைகள் மூலமாக மிக அதிகமான துன்பங்களை சமகாலத்திலே அனுபவித்தவர்கள் நாடு முழுக்க வாழும் தமிழ் மக்களாவர்.


இந்த வன்முறைச் சம்பவம் எதிர்காலத்தில் இந்நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் அரச பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக அணிதிரள வேண்டும் என்ற அடிப்படை உண்மையை வலியுறுத்தி நிற்கின்றது. (ந-5)

# கண்டியில் 5 தமிழர்கள் உட்பட ஆறு பேர் கைது

(கண்டி)

கண்டியில் மேற்கொள்ளப் பட்ட திடீர் சோதனை நடவடிக் கைகளின் போது 5 தமிழர்கள் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

தேசிய அடையாள அட்டை தொடர்பில் ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்கள் கடுகஸ்தோட்டை, அவிசாவளை, கலகா மற்றும் பங்கிலா ஆகிய பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)







திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறப்பு விருந்தினராக கோட்டக் கல்விப்பணிப்பாளர் மங்கல விளக்கேற்றுவதையும் நிலையத் தலைவர் கு.தினேஸ் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய எஸ்.சிறிதரன் மருத்துவ பீட மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.







வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மூலிகைத் தோட்டம் நேற்று காலை அச்சுவேலி பிரதேசத்தில் திறந்து வைக்கப்பட்டது. இதில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி,பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் நாடாவை வெட்டி திறந்து வைப்பதையும் ஆளுநர் மரம் நடுவதையும் வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களப் பணிப்பாளர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## லிட்ரோ காஸ் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பம்

லிட்ரோ காஸ் நிறுவனம் இலங்கையில் தனது சேவையை நேற்று உத்தியோக பூர்வமாக ஆரம்பித்துள்ளதாக அரசாங்க வர்த்தக நிலையத் திணைக்கள இயக்குநர் பி.எம்.எஸ். பட கொட தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எல்.பி. காஸின் பங்குகளில் 49 வீத பங்குகளை இலங்கை உத்தியோக பூர்வமாக முழுமையான உரிமை பெறுகிறது. எல். பி. காஸின் பெயர் லிட்ரோ காஸாக மாற்றப்பூட்டதை தொடர்ந்து புதிய உறுப்பினர்கள் நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றார்.

லிட்ரோ காஸ் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் உடமையாக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## காணாமல்போன உறவுகளையும் முகாம்களில் உள்ளோரையும் மீட்டுத்தருமாறு கோரிக்கை

(கொழும்பு)

காணாமல் போன தமது உறவுகளையும் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது பிள்ளைகளையும் மீட்டுத்தருமாறும் தமது அடிப்படை வசதிகளை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வட்டக்கச்சி, கண்டாவளை, முரசுமோட்டைப் பகுதிகளில் மீள் குடியேறியுள்ள மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வட்டக்கச்சி , கண்டாவளை,முரசுமோட்டை கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் அப்பகுதி கிராம சேவகர்கள் தலைமையில் பொதுமக்களைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்தச் சந்திப்புக்களின் போதே அப்பகுதி மக்கள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

வட்டக்கச்சி கிராம சேவகர் அலுவலகத்தில் பெருமளவான மக்கள் எம்.பியை சந்தித்து அவரிடம் மகஜர்களை கையளித்தனர்.

தனது மூன்று பிள்ளைகள் யுத்த காலத்தின் போது காணாமல் போயுள்ளதாகவும் அவர்களை மீட்டுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வட்டக்கச்சி உடகத்த கண்டியைச் சேர்ந்த க.மகேஸ்வரி என்ற தாயார் கோரிக்கை விடுத்தார்.

இதேபோல் அழகரட்ண வீதியைச் சேர்ந்த வே.கனகசபை என்பவர் தனது மகன் மற்றும் மருமகள் ஆகியோர் காணாமல் போயுள்ளதாகவும் அவர்களை மீட்டுத்தரக் கூடிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஹட்சன் வீதியைச் சேர்ந்த கு.இரத்தினேஸ்வரி என்பவர் வழங்கிய மகஜரில் தனது இரண்டு பிள்ளைகள் காணாமல் போயுள்ளதாகவும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து அறிந்து தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தம்பையா லிங்கேஸ்வரசூரியம் என்பவர் கருத்துத் தெரிவிக்கையில்,

யுத்தத்தின் போது தனது இரண்டு பிள்ளைகள் பலியானதாகவும்,ஒரு மகனைக் காணவில்லை என்றும் காணாமல் போன மகனையாவது மீட்டுத்தர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இதேபோல் கிளாறா ஜெஸ்மின் என்ற பெண் சமர்ப்பித்த மகஜரில் தனது கணவன் பொக்கனையில் வைத்து காணாமல் போனதாகவும் அவரை மீட்டுத்தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதேவேளை ஆறுமுகம் கறுப்பையா, மு.நமசிவாயம், ரா.நந்தினி, கோ.பிரதீபா, அ.மயில்வாகனம், ம.இருதயராசன் ஆகியோர் தமது பிள்ளைகள் மற்றும் கணவன்மார் தடுப்பு முகாமில் உள்ளதாகவும், அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

தனபாலசிங்கம் டேனியல்,மா.நகுலேஸ்வரன் ,சவரியப்பன் ஆகியோர் தமது உறவினர்கள் ,காணாமல் போயுள்ளதாகவும், அவர்களை மீட்டுத்தர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இதேபோல் கண்டாவளை ,முரசுமோட்டை பகுதி மக்களும் தமக்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் காணாமல் போன மற்றும் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள உறவினர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விஜயகலா மகேஸ்வரன் எம்.பியிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இவ்விடயங்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக எம்.பி.மக்களிடம் உறுதியளித்துள்ளார்.

(ஸ்ரீ)

## இலங்கையின் தேசிய உணவாக பாற்சோறு பிரகடனம்

(கொழும்பு)

பாற்சோறு இலங்கையின் தேசிய உணவாக நாளை புதன்கிழமை பிரகடனப்படுத்தப்படுவதுடன் உலகுக்கும் அறிமுகம் செய்து வைக்கப்படுவதாக பிரபல சமையல் நிபுணர் கலாநிதி பப்ளிஸ் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சுதந்திரம் என்ற புதிய கலாசாரத்தின் அடிப்படையிலான கண் காட்சி தொடர்பாக தகவல் திணைக்களத்தில் நேற்று காலை ஊடகவியாலாளர்களுக்கு விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையின் ஒவ்வொரு விடயத்துக்கும் தேசிய மரபுரிமை அடையாளங்கள் உள்ளன. எனினும் தேசிய உணவு என்ற வகையில் எதுவும் இல்லை. எனவே தான் பாற்சோற்றை தேசிய உணவாக அறிமுகப்படுத்த உள்ளோம்.

அதன்படி நாளை எமது தேசிய உணவாக பாற்சோறு உலக நாடுகளுக்கும் அறிமுகம் செய்துவைக்கப்படும் என மேலும் குறிப்பிட்டார்.

அரசாங்கத் தகவல் திணைக்களம் சுதந்திரம் என்ற பெயரில் புதிய கலாசாரத்தின் அடிப்படையிலான கண்காட்சி யொன்றை சுதந்திர சதுக்கத்தில் நடத்தவுள்ளது.

பல வலயங்களாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்தக் கண்காட்சியில் சமையல் பிரிவுக்கென ஒரு வலயம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் நட்சத்திர விடுதிகள் ஆறு பங்கெடுத்துக் கொள்வதுடன் இலங்கை வாழ் முக்கிய இனங்களான ஆறு இனங்களின் உணவு வகைகள் இங்கு தயாரிக்கப்படுவதோடு மேலும் ஆதிவாசிகளின் உணவுப் பண்டங்களும் இங்கு தயாரிக்கப்படுகின்றன.

இதற்கென உணவுச் சாலை ஒன்றும் அமைக்கப்படுகின்றது. இந்த உணவுச் சாலைகளின் தயாரிக்கப்படும் பல தரப்பட்ட உணவுப் பண்டங்களையும் சிறிய தொகையிலான கட்டணத்துக்கு சுவைத்து மகிழ மக்களுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இதேவேளை உலகின் மிகப் பெரிய பாற்சோறும் இங்கு தயாரிக்கப்படுகிறது. 1200 கிலோ அரிசி 300 கிலோ மரமுந்திரிகை , 250 கிலோ முந்திரிகை 150 கிலோ தேன் , 250 கிலோ கித்துல் வெல்லம் , 1500 காய் தேங்காய், 25 பைக்கற் உப்பு போன்றவை கொண்டு இது தயாரிக்கப்படுகின்றது.

(ஸ்ரீ-2)

## இலங்கையில் முதல் தடவையாக வனவிலங்கு நூதனசாலை நிர்மாணம்

(கொழும்பு)

இலங்கையில் முதல் தடவையாக வனவிலங்கு நூதனசாலையை பார்வையிடும் சந்தர்ப்பத்தை பொதுமக்களுக்கு வழங்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த நூதனசாலை கிரிதலை வனவிலங்கு பயிற்சி மத்திய நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இதன் பணிகள் நிறைவடைந்துள்ள போதும் இதுவரையில் இதனை பார்வையிடும் வாய்ப்பு மக்களுக்கு கிடைக்கவில்லை.

இந்த நிலையில் வனவிலங்கு தொடர்பிலான அறிவை மக்களுக்கு வழங்கும் நோக்கில் இந்த நூதனசாலையை திறந்து வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் பணிப்பாளர் சந்திரவங்ச பத்திராஜ் தெரிவித்துள்ளார்.

இந்த நூதனசாலையில் 70 க்கும் அதிகமான வெளிநாட்டு விலங்குகளின் பாகங்களைக் கொண்டு மீள உருவாக்கப்பட்ட விலங்குகளை பார்வையிட முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)


## அறிவித்தல்

**வலி.கிழக்கு பிரதேச சபை,**
**உப அலுவலகம், உரும்பிராய்.**
**ஆதன பெயர்மாற்றம்**
**வட்டாரம் 01, யாழ்.வீதி 3 ஆம் ஒழுங்கை, ஆதன இல.07**

ஆதன இலக்கம் 07, யாழ் வீதி 3 ஆம் ஒழுங்கை, 01 ஆம் வட்டாரத்தில் சொந்தக்காரர் உ.கோ.எஸ். கந்தையா பெண் மகேஸ்வரி எனும் பெயரிலுள்ள ஆதனத்திற்கு அமிர்தநாதன் கிறிஸ்ரி றொபின் பெண் பிரியதர்சினி என்போர் குறித்த ஆதனம் தமக்கு உரிமை யானது என உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து ஆதனவரிப் பதி வேட்டில் தனது பெயரை மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்.


இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் எவரேனும் இருப் பின் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக இவ் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து அமிர்தநாதன் கிறிஸ்ரி றொபின் பெண் பிரியதர்சினி என்னும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

செயலாளர்,
வலி கிழக்கு பிரதேசசபை,
புத்தூர்.

(சி- 1631)

# தேசிய மரநடுகைத் திட்டம் -2010





யாழ். பல்கலைக்கழகத்தில்...





யாழ். மாவட்ட மேலதிக மாகாண கல்விப் பணிமனையில்....





யாழ்.சென் பெனடிக்ற் வித்தியாலயத்தில்...





படங்கள்:-என்.குமார்,எஸ்.கரன்

யாழ்.இலங்கை வங்கியின் அதி மேற்தர கிளையில்....

## மருந்தாளர்களுக்கான (வெளிவாரி) எழுத்துப் பரீட்சைக்கு விண்ணப்பம்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தால் நடாத்தப்படும் மருந்தாளர் (வெளிவாரி) எழுத்துப் பரீட்சை கொழும்பில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான வகுப்புக்கள் யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரிப் பட்டப்படிப்பு) இல 464, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்கள் நடைபெற்று வருகின்றன.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை எனக் குறிப்பிடப்படுகிறது.

அத்துடன் மேமாதம் 2010 இல் நடைபெற்ற மருந்தாளர் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான செய்முறைப் பரீட்சை மற்றும் வீவா பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதம் கொழும்பு பல்கலைக் கழகத்தில் இடம்பெறவுள்ளது.

இதற்கான மேலதிக விபரங்களை இராச நேரு சத்தியசாயி மெடிக்கல் கிளினிக் & பார்மசி, பிரதான வீதி,பருத்தித்துறை என்ற முகவரியுடனோ அல்லது 0773164251 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## சனி,ஞாயிறு தினங்களிலும் நீதிமன்றங்களை திறப்பதற்கு அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

நிலுவையிலுள்ள வழக்குகளுக்குத் துரிதமாகத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் சனி மற்றும் ஞாயிறு தினங்களிலும் நீதிமன்றங்களைத் திறப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுமார் 8 இலட்சம் வழக்குகள் நீதிமன்றங்களில் தேங்கிக்கிடப்பதாக நீதி அமைச்சர் அதாவுட செனவிரத்ன குறிப்பிட்டார். வழக்குகளை விசாரிப்பதில் தாமதம் நிலவுவதால் மனுதாரர்களும் பிரதிவாதிகளும் பாரிய சிரமங்களுக்கு உள்ளாவதாக அவர் தெரிவித்தார்.

ஒத்திவைக்கப்படும் வழக்குகள் தொடர்பில் ஆராய்வதற்கும் நீதிமன்றங்களில் விசேட நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கும் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார்.

நிலுவையிலுள்ள வழக்குகளுக்குத் துரித தீர்வு காண்பதற்காக மேலதிக நீதிமன்றங்களை 2 வருடங்களுக்கு முன்னெடுக்கத்திட்மிட்டுள்ளதாக நீதி அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஸ்ரீ-2)

## இலங்கையின் மொழிப் பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியா உதவி

(கொழும்பு)

இலங்கையில் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண உதவிகள் வழங்கப்படும் என இந்தியா அறிவித்துள்ளது.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்திய நிபுணர்கள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

இந்திய மனித உள அபிவிருத்தி அமைச்சின் மொழிப் பிரிவு தலைவர் அனிதா பட்நாகர் உள்ளிட்ட நான்கு மொழியலாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

இலங்கை மொழிகளுக்கு இடையில் புரிந்துணர்வுடன் கூடிய அபிவிருத்தியை எவ்வாறு ஏற்படுத்த முடியும் என்பது குறித்து ஆலோசனை வழங்கப்படவுள்ளதாக அனிதா தெரிவித்துள்ளார்.

மொழிப் பிரச்சினை ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை எனவும் அரசியல் மற்றும் பொருளாதார முரண்பாடுகளே ஏற்பட்டிருக்கும் என இந்திய நிபுணர்கள் குழுவைச் சேர்ந்த பேராசிரியர் ராஜேஷ் சச்தேவா குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்-சிங்கள மொழி ஆசிரியர்களுக்கு நிலவும் இடைவெளி நீக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பாக தமிழ்மொழி ஆசிரியர்களுக்கு சிங்கள அறிவும் சிங்களமொழி ஆசிரியர்களுக்கு தமிழறிவும் காணப்பட வேண்டியது அவசியமானதெனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் ஒன்பது மாகாணங்களிலும் ஒன்பது மொழிப் பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்படவுள்ளதாகவும் அதற்கான உதவிகளை இந்தியா வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பான்மையான தமிழ் மக்கள் சிங்கள மொழியையும் பெரும்பான்மை யான சிங்கள மக்கள் தமிழ் மொழியையும் கற்றுக்கொள்ள விரும்புவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (ஸ்ரீ-2)

## இலங்கை விவகாரம் குறித்து பல்வேறு தரப்பினரிடமும் தரவுகள் திரட்டப்பட்டு ஆராயப்பட்டு வருகின்றது

### ஐ.நா. நிபுணர் குழு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை விவகாரம் குறித்து ஆராயப்பட்டு வருவதாக ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு அறிவித்துள்ளது.

இதுவரை காலமும் கிடைக்கப்பெற்ற தரவுகள் ஆராயப்பட்டு வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அல் ஜசீரா தொலைக்காட்சியில் இலங்கை தொடர்பாக வெளியிடப்பட்ட காட்சிகள் பரிசீலனை செய்யப்படுமா என்பது குறித்து பேச்சாளர் எந்தவித கருத்துக்களையும் வெளியிடவில்லை.

இது தொடர்பாக பல்வேறு தரப்பினரிடமும் தரவுகள் திரட்டப்பட்டு ஆராயப்பட்டு வருவதாகவும் பணிகளை செவ்வனே முன்னெடுக்கும் நோக்கில் ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு ஊடகங்களுக்கு அடிக்கடி கருத்துக்களை வெளியிடுவதனை தவிர்த்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பான ஆலோசனை வழங்கும் நோக்கில் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் நிபுணர்கள் குழுவொன்றை நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## போதை ஒழிப்பு நடவடிக்கைகளின் போது 11 கிலோ ஹெரொயின் மீட்பு

(கொழும்பு)

பல்வேறு பிரதேசங்களில் மேற் கொள்ளப் பட்ட போதை ஒழிப்பு நடவடிக்கைகளின் போது 5 பேர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸ்ஸை, புத்தளம் மற்றும் கொழும்பு பிரதேசங்களில் இந்த சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் சோதனை நடவடிக்கைகள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் துறை பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

கல்கிஸை சேரம் வீதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது ஒரு கிலோவுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப் பொருட்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைதானார்.

இதேவேளை புத்தளம் மணிக்கூண்டுக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது 11 கிலோ கிராமிற்கும் அதிகமான ஹெரோயினுடன் 2 பேர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் இருவரும் மன்னார் மற்றும் புத்தளம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)

## தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டி; வடக்கில் வெற்றியீட்டியோர்

2010 ஆம் ஆண்டிற்கான அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டிகள் கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை வரை வெளியான போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதில் வெற்றியீட்டிய வட மாகாணப் பாடசாலைகளின் விபரம் வருமாறு,

பிரிவு-1

ஆக்கம் -எழுத்து முதலாம் இடம்:- பா. காருண்யா-சென்.ஜோன்ஸ்பொஸ்கோ வித்தி.

பிரிவு-2

கட்டுரை வரைதல் - இரண்டாம் இடம்:- ப.கஸ்தூரி - யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

பிரிவு-5

குறுநாடக ஆக்கம் - முதலாம் இடம்:- அ.கோகுலன் - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

பிரிவு-1

வாசிப்பு -மூன்றாம் இடம்:-த.சாம்பவி- இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்.

பிரிவு-2

வாசிப்பு -இரண்டாம் இடம்:-ச.டிலக்ஷினி - இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்.

பிரிவு-2

பேச்சு -மூன்றாம் இடம்:-பி.கீர்த்தனா - கிளி/ இந்துக்கல்லூரி.

பிரிவு-2

பாவோதல்- மூன்றாம் இடம்:- ர.ஜதுஷா வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை.

பிரிவு-2

இசை -முதலாம் இடம்:-வி.வத்சாங்கித சர்மா-இந்துக்கல்லூரி.

பிரிவு -3

இசை- இரண்டாம் இடம்:- ந.சிபிஷா- இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்.

இசைக்குழு -1 முதலாமிடம்

இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்.

பிரிவு-3

நடனம்- முதலாம் இடம்:-சி.பாவனா- வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை.

நடனக்குழு -1 முதலாமிடம் மத்திய கல்லூரி

நாட்டிய நாடகம்- முதலாமிடம்- மத்திய கல்லூரி.

வில்லுப்பாட்டு- முதலாமிடம்:-சென் ஜோன்ஸ் கல்லூரி.

இலக்கிய நாடகம்- முதலாமிடம் -விபுலானந்தாக் கல்லூரி. (ஸ்ரீ-2)

## ஐ.தே.க். மறுசீரமைப்பு யோசனைத்திட்டங்கள் அதன் செயற்குழுவினால் அங்கீகரிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி மறுசீரமைப்பு யோசனைத் திட்டங்களை அதன் செயற்குழு அங்கீகரிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சித் தலைவர் உள்ளிட்ட முக்கிய பதவிகளுக்கான தெரிவுகளின் போது இணக்கப்பாடு எட்டப்படாவிட்டால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும் எனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ள மறுசீரமைப்புத் திட்டங்களுக்கு கட்சியின் செயற்குழு ஆதரவளிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதைய கட்சி யாப்பில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

புதிய திருத்தங்களின் மூலம் கட்சியின் ஜனநாயகத்தன்மை மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை கட்சி உறுப்பினர்களுக்கு எதி ராக ஒக்காற்று நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பில் புதிய பரிந்துரைகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜ பக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

கட்சி விதிகளை மீறிச் செயற்படும் உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கான முழு அதிகாரங்களும் செயற்குழுவிற்கு வழங்கப்படக்கூடிய வகையில் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஆளும்கட்சியுடன் இணைந்து கொண்ட சில ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணார்பண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம்வித்தியாலயத்தில் இவ்வருடம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு இப்பாடசாலை மண்டபத்தில் திருமதி பு.சண்முகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக யாழ.கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன், நல்லூர்க் கோட்டக்கல்வி அதிகாரி சி.மாணிக்கராஜா மற்றும் வைத்திய கலாநிதி லயன் எஸ்.தியாகராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 21.11.2010 தொடக்கம் 07.05.2011 வரை




(அவிட்டம்3 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட் பாதி 1, 2, 3 ஆம் பாதங் கள் வரை)

**தனவரவு திருப்தி தரும்! தன்னம்பிக்கை கூடி வரும்!**

**இன்பத்தையும், துன்பத்தையும் சரி சமமாக பாவிக்கும் கும்ப ராசி நேயர்களே!**

இதுவரை உங்கள் இராசியில் சஞ்சரித்து வந்த குரு, இடையில் மீனத்திற்கு சென்று, மீண்டும் சில நாட்கள் உங்கள் இராசியில் சஞ்சரித்து, பின் இப்பொழுது தன ஸ்தானத்தில் தனது சொந்த வீட்டில் வலுவோடு சஞ்சரிக்கிறது. அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் ஒருபுறம் இருந்தாலும், அதை சொந்த வீட்டில் இருந்து குரு பார்த்து பலன் கொடுக்க போவதால், இந்த குருப்பெயர்ச்சி துயரங்கள் அனைத்தையும் துள்ளியோட வைக்கப் போகிறது.

அயராது உழைத்த உழைப்பிற்கு அற்புத பலன் கிடைக்கப்போகிறது. ஆதாயமில்லாத அலைச்சல் களையும், ஆரோக்கிய பாதிப்புகளையும் இதுவரை நீங்கள் கண்டிருக்கலாம். ஆனால், இனி அந்த நிலை மாறும். நல்ல சம்பவங்களை நாளும் சந்திக்க இந்த குரு வழி வகுக்கப் போகிறார். குழந்தையும், தெய்வமும் கொண்டாட, கொண்டாடத்தான் என்று சொல்வார்கள். நலம் தரும் விதத்தில் குருவை கொண்டாட வேண் டும். குடும்ப ஸ்தானத்திற்கு குருவருவதால், குடும்பத்தினர்கள் அனைவரும் குருப் பெயர்ச்சிக்கு முன்னதாகவே கோவிலுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது. அப் பொழுது தான் அது பார்க்கும் இடத்தால் பல மடங்கு பலன் கிடைக்கும்.

குறிப்பாக, குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே, ருண ரோக ஸ்தானம், இழப்பு ஸ்தானம், தொழில் ஸ்தானம் ஆகியவை புனிதமடைகின்றன. எனவே, அந்தந்த இடங்களுக்குஉரிய காரியங்கள் அனைத்தும் இனிதாக நடைபெறத் தொடங்கும். சென்ற சில மாதங்களாக ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்ட வாய்ப்புகள் வந்து சேரும். ஆரோக்கியம் சீராகி அன்றாடப் பணிகளை உற்சாகத்தோடு செயல்பட ஆரம்பிப்பீர்கள்.

குரு உங்கள் இராசியைப் பார்க்கவில்லை என்றாலும், உங்கள் ராசிக்கு 6, 8, 10 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார் அல்லவா? குருவின் 5, 7, 9 ஆகிய பார்வைகள் பதியும் இடமெல்லாம் புனிதமடையும் என்பது சாஸ்திர நியதி. அந்த குரு எந்த இடத்தில் இருந்து கொண்டு பார்க்கிறதோ, அந்த இடத்திற்குரிய ஆதிபத்ய பலன்களையும் தன் பார்வை பலம் மூலம் சேர்த்து வழங்கும்.

சுமார் ஐந்தரை மாதங்கள் மட்டுமே மீனத்தில் சஞ்சரிக்கும் இந்த குரு இனிய பலன்களை உங்களுக்குள் வழங்குவார் என்றாலும், இடையிடையே பார்க்கும் சனியால் எதிர்பார்த்த காரியங்களில் சில தடைகளும் ஏற்படலாம். எனவே சனீஸ்வர வழிபாடும் உங்களுக்குத் தேவை, குரு தெட்சிணாமூர்த்தி வழிபாடும் உங்களுக்குத் தேவை. குரு, பணவரவைக் கொடுக்கும் தன்மையுடையது. சனி அதைச் சந்தோஷமாக செலவிடும் விதத்தில் வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொடுக்கும். உடல் ஆரோக்கியத்தில் மட்டும் அடிக்கடி தொல்லைகள் உருவாகலாம். எனவே நோய்க்கான அறிகுறிகள் தென்படும்போதே மருத்துவரிடம் ஆலோசனை பெறுவது நல்லது. வாகனங்களில் செல்லும்போதும் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம்.

**நீங்கள் உதவும் மனப்பான்மையை உள்ளத்தில் பதித்தவர்கள்!**

எல்லோரும் பதவிக்கு ஆசைப்படுவார்கள்! நீங்களோ 'உதவி' செய்ய ஆசைப்படுவீர்கள்! உதவும் மனப்பான்மை உங்களிடம் இருப்பதால்தான் ஒவ்வொருவர் மனதிலும் இடம் பிடிக் கிறீர்கள். நாட்டுப்பற்று உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். நல்லவர்களோடு மட்டுமே சிநேகம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்வீர்கள்.

எந்தக் காரியத்தை எப்பொழுது செய்தால் வெற்றி கிடைக்கும் என்பதை அறிந்து வைத்திருப்பீர்கள். வேடிக்கையாகப் பேசும் சுபாவம் உங்களுக்கு உண்டு. சொந்தக்காரியங்களை விட்டு விட்டு மற்றவர்களின் காரியங்களில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும் நீங்கள், தர்மசிந்தனை அதிகம் பெற்றவராக இருப்பீர்கள். உங்கள் இராசிக்கு சப்தமாதிபதியாகச் சூரியன் அமைவதால் திருமணம் நடைபெறும் சமயத்தில் நல்ல பொருத்தம் பார்த்துத் தாரத்தை தேர்ந்தெடுப்பதன் மூலமே இல்லறத்தை இனிமையானதாக ஆக்கிக் கொள்ள முடியும்.

உள்ளதைக் கொண்டு நல்லதைச் செய்வோம் என்று சொல்வீர்கள். மற்றவர்களின் பார்வைக்கு ஆடம்பரமாகக் காட்சியளிப்பது. உங்களுக்குப் பிடிக்காது. இராசிநாதன் சனியை மந்தன் என்று அழைப்பது வழக்கம். எனவே எதிலும் நிதானத்தைக் கடைப்பிடித்து நிம்மதியைத் தேடிக்கொள்வீர்கள். உங்களிடம் ஒப்படைத்த பொறுப்புகளை முடித்துக் கொடுக்காமல் ஓய்வெடுக்க மாட்டீர்கள். இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு இந்தக் குருப்பெயர்ச்சி எப்படி அமையப்போகிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

*இரண்டினில் குருதான் வந்தால்*
*எதிர்பார்ப்பு வெற்றியாகும்!*
*திரண்டதோர் செல்வம் சேரும்!*
*தித்திக்கும் தொழில்கள் வாய்க்கும்!*
*வரண்டதோர் வாழ்க்கை மாறும்!*
*வசதிகள் பெருகி நிற்கும்!*
*அருள்தரும் குருவின் ஆற்றல் அகிலத்தில் புகழைச் சேர்க்கும்!*

என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது, பொருளாதார நிலை உயரும் எனவே, நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிக்க இயலும்.கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியவில்லையே என்ற கவலை இனி அகலும்.

**விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை!**

குருபார்வை குழப்பத்தைப் போக்கி ,குதூகலத்தை வழங்கும் எனவே, தற்சமயம் பெயர்ச்சியாகியுள்ள குரு,உங்கள் இராசிக்கு 6,8,10 ஆகிய இடங்களைப் பார்த்து புனிதப் படுத்துகிறார். எனவே ,கடன் சுமை குறைவது முதல் , காரியங்களில் வெற்றி கிடைப்பது வரை குருவின் அருட்பார்வையால் கிடைக்கப் போகிறது. மூடிக்கிடந்த தொழிலில் கூட திறப்பு விழா காண்பீர்கள் முன்னேற்றத்திற்கான அறிகுறிகள் ஒவ்வொன்றாகத் தோன்றும். குறிப்பாக ,எதிர்ப்பு,வியாதி,கடன் , இழப்பு ,விரயம் தொழில் போன்ற ஸ்தானங்களை குருபார்ப்பதால் அந்த இடங்களில் எல்லாம் இனி நல்ல பலன்களை நீங்கள் வரவழைத்துக்கொள்ளலாம். எனவே ,எதிர்ப்புகள் விலகும் இலாப நோக்கத்தோடு பழகியவர்கள் விலகுவர். கூட்டாளிகள் உங்கள் குணம் அறிந்து நடந்துகொள்வார். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாற வழி கிடைக்கும். உத்தியோகம்,தொழிலில் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து சேரலாம்.

சுய ஜாதகத்தில் தெசாபுத்தி பலன் பெற்றவர்கள் வரும் மாற்றத்தை ஏற்றுக்கொள்ளலாம். மற்றவர்கள் அஸ்டமத்துச்சனி விலகும் வரை பொறுமையை கடைப்பிடிப்பது நல்லது. இதுவரை ரணசிகிச்சை தான் செய்ய வேண்டும் என்று சொல்லிய மருத்துவர்கள் இனி சாதாரண மருந்து , மாத்திரைகள் சாப்பிட்டாலே குணமாகும் என்று கூறுவர்.

இழப்புகள் ஸ்தானத்தை குரு பார்ப்பதால் சென்ற குருப்பெயர்ச்சியில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்டும் வாய்ப்புக் கிட்டும் நீண்ட தூரப் பயணங்களுக்காக எடுத்த முடிவை மாற்றிக்கொள்வீர்கள். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். இடம்,பூமிகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். சொத்துக்களை சரியாக பராமரிக்க முடியவில்லையே என்று அதை மற்றவர்களிடம் ஒப்படைத்தும்,அவர்களும் சரியாக கவனிக்கவில்லையே என்று கவலைப்பட்ட நிலை இனி மாறும்.

அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வருவீர்கள் புதிதாக பழக்கமானவர்கள் மூலமாக ,நீங்கள் யாருக்கேனும் தொகை வாங்கிக்கொடுத்திருந்தால் அது வரவில்லையே என்று இதுவரை கவலைப்பட்டிருப்பீர்கள். பல முறை நடையாய் நடந்தும் பாக்கியை வசூலிக்க முடியவில்லையே என்ற கவலை இனி மாறும். பாசம் காட்டாத நண்பர்கள் இனி பாசம் காட்டுவர்.

தொழில் வளர்ச்சி கூடும் துணிவும் ,தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பென்னான எதிர் காலம் அமைய அடித்தளம் அமைத்துக் கொள்வீர்கள் கிளைத்தொழில்கள் தெடாங்க புதிய பங்குதாரர்கள் வந்து இணைவர். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வி.ஆர்.எஸ். பெற்றுக் கொண்டு ,விரும்பிய படியே வாழ்க்கைப் பாதையை அமைத்துக்கொள்வர். தெசாபுத்தி பலம் பெற்றவர்கள் உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு,பதவி உயர்வு போன்றவற்றை காண்பர். பெற்றோர்களில் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். பிரச்சினைக்குரிய இடத்தை பங்கிட்டுக்கொண்டு வீடுகட்டும் முயற்சியிலும் ஆர்வம் காட்டுவீர்கள்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

இரண்டாம் இடத்து குருவால் இனிய பலன்கள் வந்து சேரவும் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறவும் குரு தெட்சாண மூர்த்தியை வழிபட்டு வாருங்கள். அம்பிகை மற்றும் குரு பகவானையும் வழிபட்டு மகத்தான வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுங்கள்.

**சிவல்புரி சிங்காரம்**

**கும்ப இராசி பெண்களுக்கு குடும்பப் பிரச்சினைகள் தீரும்!**

கும்ப இராசியில் பிறந்த பெண்களுக்கு , இந்தக் குருப்பெயர்ச்சி குடும்ப பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விதத்தில் அமையப் போகிறது. வருமானம் திருப்தி தரும். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். குடும்ப ஸ்தானத்தில் குரு பலம் பெறுவதால் வாழ்க்கைத் துணை அமையாதவர்களுக்கு வாழ்க்கைத்துணை அமையும் வாரிசுகள் இல்லாதவர்களுக்கு வாரிசுகள் உருவாகும். உங்கள் பெயரிலேயே உங்கள் கணவர் ,இடம்,வீடு, வண்டி, வாகனம் போன்றவற்றை வாங்க முன் வருவார். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் அருகில் இருப்பவர்கள் அனுசரித்துச்செல்வது நல்லது. சுய ஜாதகத்தில் தெசா புத்தியின் பலம் அறிந்து பரிகாரங்களை செய்து பலன்களை வரவழைத்துக் கொள்ளுங்கள். (தொடரும்)

**அன்பு வாசகர்களே!**

குருப்பெயர்ச்சிப் பலன்கள் நாளையுடன் நிறைவு பெறுவதால் 18ஆம்திகதி முதல் பிறந்த திகதிப் பலன்கள் தொடர்ந்து வெளிவரும் என்பதை அறியத் தருகின்றோம்.



யா/ அச்சுவேலி மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட மாகாண சிவில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியும் கல்லூரியின் பழையமாணவருமான எஸ். தியாகேந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட அச்சுவேலி வர்த்தக வங்கி முகாமையாளர் கே.விக்னேஸ்வரராஜா, பாடசாலை வேலைப்பகுதி சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ். ரவீந்திரதாஸ் ஆகியோர் பாண்ட் வாத்திய இசையுடன் கல்லூரி அதிபர் வே.பாலசுப்பிரமணியம் தலைமையில் அழைத்துவரப்படுவதையும் சிறப்பு விருந்தினர் *அச்சு மத்திய தீபம்* மலரினை வெளியிட்டு வைப்பதையும் படங்களில் காணலாம்.

# யுத்தத்தால் கணவனை இழந்த பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கவேண்டும்

## வித்யானி ஹெட்டிகொட தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் காரணமாக கணவனை இழந்த பெண்களுக்கு சுய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுக்க வேண்டுமென பெண்களுக்கான கைத்தொழில் மற்றும் வர்த்தகப் பேரவையின் தலைவி வித்யானி ஹெட்டிகொட தெரிவித்துள்ளார்.

யுத்தம் காரணமாக கணவனை இழந்த வடக்கு-கிழக்கு பெண்கள் சிறு சுயதொழில் முயற்சிகளில் தற்போது ஈடுபட்டு வருவதாகவும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தொழிற் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதில் தகவல் தொழில் நுட்பம், சிகை அலங்காரம், சாரதி பயிற்சி உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உத்தியோகபூர்வ புள்ளி விபரங்கள் வெளியிடப்படாத போதிலும் யுத்தம் காரணமாக ஒரு இலட்சம் பேர்வரை கணவனை இழந்த பெண்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சவால்களை எதிர்நோக்கக் கூடிய வகையில் பெண்களுக்கு பயிற்சி வழங்கப்படவேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த பெண்களுக்கு ஆங்கில மொழிப் பயிற்சிகள் வழங்கப்படவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

## வீடொன்றிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு நாவற்குடா பகுதி வீடொன்றிலிருந்து ஆண்ணொருவரின் சடலம் நேற்று காலை மீட்கப் பட்டுள்ளது.

மரணமானவர் குறித்த பகுதியைச்சேர்ந்த தட்டச்சு இயந்திர திருத்துனர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். குறித்த சடலம் இவ ரின் வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

சடலம் மீட்பு தொடர்பான செய்தியையடுத்து காத்தான்குடி பொலிஸாரும் நீதவானும் ஸ்தலத்துக்கு விஜயம் செய்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான் குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# ஜோர்தானில் இலங்கைப் பணிப்பெண்ணுக்கு ஆணி ஏற்றப்பட்டமை குறித்து விசாரணை

(கொழும்பு)

ஜோர்தானில் பணிபுரிந்து வரும் இலங்கை பணிப்பெண்ணொருவருக்கு ஆணி ஏற்றப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் விசாரணை நடத்தி வருகின்றது.

டி.எம்.சந்திமா என்ற பணிப்பெண்தான் பணிபுரிந்த வீட்டின் எஜமான் பலவந்தமாக ஆறு ஆணிகளை விழுங்க வைத்தாக ஜோர்தான் அமானில் உள்ள இலங்கை தூதுவராலயத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக வெளிநாட்டுவேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்தது.

இது தொடர்பில் வைத்தியர்களின் முழுமையானதொரு அறிக்கையை எதிர்பார்த்திருப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

அத்துடன் மருத்துவ சாட்சியங்களை அடுத்து இச்சம்பவத்துக்கு எதிராக அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கை பணிப்பெண்ணுக்கு ஆணி ஏற்றப்பட்ட இச்சம்பவம் கடந்த 3 மாதங்களுக்குள் 3ஆவது சம்பவமாக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய பிரபுக்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தலாம்

## திவயின எச்சரிக்கை

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜ பக்ஷ, சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன போன்ற முக்கிய பிரபுக்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படலாம் என திவயின தனது ஆசிரியர் தலையங்கத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு முற்று முழுதாக தோற்கடிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட முடியாதெனவும் குறித்த பிரமுகர்களின் பாதுகாப்பு தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டுமெனவும் அப்பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது.

வெளிநாடுகளில் இயங்கி வரும் புலம்பெயர் விடுதலைப்புலிகள் தமிழ் ஆதரவு அமைப்புக்களிடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பிற்கு யார் தலைமை தாங்குவது என்பது தொடர்பில் இந்த சர்ச்சை நிலைமை ஏற்பட் டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள் ளது.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டதன் பின்னர் மீளவும் பயங்கரவாத நடவடிக்கைகளை புலிகள் வலையமைப்பு ஆரம்பிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் பொது நிகழ்வுகள் அபிவிருத்தி திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் முக்கிய பிரபுக்கள் தங்களது பாதுகாப்பு தொடர்பில் மேலதிக கவனம் செலுத்த வேண்டு மெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மாபெரும் விழிப்புணர்வு வழிகாட்டல் கருத்தரங்கு

அடுத்தவருடம் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் பெற்றோருக்கான இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மாபெரும் விழிப்புணர்வு வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலா சாலையில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் பொ.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை, சிறப்பு விருந்தினர்களாக தேசிய சேமிப்பு வங்கியின் வட மாகாண பிராந்திய முகாமையாளர் வி.அருளானந்தம், ஈ.எஸ். பேரம்பலம் அன் சன்ஸ் நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர் ஈ.எஸ். பிரகாரெத்தினம், யாழ். கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன், யாழ். புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலய அதிபர் அருட்சகோதரி எம். ஜீவந்தி, கரவெட்டி மாணிக் கவாசகர் வித்தியாலய அதிபர் இ.இராகவன் ஆகியோர் கலந்து கொள்வுள்ளனர்.

இக்கருத்தரங்கில் விசேடமாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் சரா.புவனேஸ்வரன் , யாழ். முன்னணி ஆசிரியர் கே.தவயோகராஜா ஆகியோர் சிறப்பான வழிகாட்டலை வழங்கவுள்ளனர்.

நன்றியுரை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்ட செயலாளர் என்.நகுலநாதன் வழங்கவுள்ளார் என இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் பொ.அருணகிரிநாதன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2010.11 16

- 1384 - பெண்ணாக இருந்தாலும் பத்து வயது "ஜாட்விகா" என்பவள் போலந்தின் மன்னராக முடிசூடினாள்.
- 1532 - ஸ்பானியத் தளபதி பிரான்சிஸ்கோ பிசாரோ இன்கா பேரரசின் மன்னன் அட்டஹுவால்பாவைத் தோற்கடித்து சிறைப்பிடித்தான்.
- 1632 - சுவீடனின் குஸ்டாவிஸ் அடோல்பஸ் போரில் கொல்லப்பட்டான்.
- 1846 - இலங்கையில் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1849 - அரசுக்கெதிராகப் புரட்சி செய்ததாகக் குற்றம் சாட்டி ரஷ்ய எழுத்தாளரான பியோதர் தஸ்தயெவ்ஸ்கிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனாலும் தண்டனை பின்னர் கடைசி நேரத்தில் நிறுத்தப்பட்டது.
- 1885 - கனடாவின் மேட்டிஸ் பழங்குடித் தலைவர் லூயிஸ் ரியெல் தூக்கிலிடப்பட்டார்.
- 1896 - முதற்தடவையாக மின்சாரம் மின்னாக்கி ஒன்றிலிருந்து நகருக்கு அனுப்பப்பட்டது. இது நியூயோர்க் நகரில் நடந்தது.
- 1904 - ஜோன் பிளெமிங் வெற்றிடக் குழாயைக் கண்டுபிடித்தார்.
- 1907 - ஒக்லகோமா ஐக்கிய அமெரிக்காவின் 46வது மாநிலமாக இணைந்தது.
- 1920 - அவுஸ்திரேலியாவின் தேசிய விமான சேவை குவாண்டாஸ் ஆரம்பிக்கப்பட்டது.
- 1933 - ஐக்கிய அமெரிக்காவும் சோவியத் ஒன்றியமும் தூதரக உறவை ஆரம்பித்தன.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியாவின் விமானப் படைகள் ஜெர்மனியின் ஹாம்பேர்க் நகரில் குண்டுகளை வீசின.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியின் டியூரென் நகரம் கூட்டுப் படைகளின் குண்டுத் தாக்குதலில் முற்றாக அழிந்தது.
- 1945 - பனிப்போர்: ஐக்கிய அமெரிக்காவின் இராணுவம் ஜெர்மனியின் அறிவியலாளர்கள் 88 பேரை தனது வானியல் தொழில் நுட்பத்தில் உதவுவதற்காக இரகசியமாக நாட்டுக்குள் அனுமதித்தது.
- 1965 - சோவியத்தின் வெனேரா 3 விண்கப்பல் வெள்ளி கோளுக்கு செலுத்தப்பட்டது. வேறொரு கோளின் தரையை அடைந்த முதலாவது விண்கப்பல் இதுவாகும்.
- 1973 - நாசா மூன்று விண்வெளி வீரர்களுடன் ஸ்கைலாப் 484-நாள் திட்டத்தில் விண்ணுக்கு அனுப்பியது.
- 1988 - சுமார் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் பாகிஸ்தானில் இடம்பெற்ற தேர்தல்களில் பெனாசீர் பூட்டோ பிரதமராகத் தேர்ந்தேடுக்கப்பட்டார்.
- 2002 - சார்ஸ் நோய் முதன் முதலில் சீனாவின் குவாங்டோங் என்ற இடத்தில் பதியப்பட்டது.

### பிறப்புகள்

- 1922 - ஜோசே சரமாகூ, நோபல் பரிசு பெற்ற போர்த்துக்கேய எழுத்தாளர்
- 1930 - சின்னுவ அச்சிப்பே, நைஜீரிய எழுத்தாளர்
- 1982 - அமாரே ஸ்டௌடமையர், அமெரிக்க கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்


- 1999 - டானியல் நேத்தன்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1928)
- 2006 - மில்ட்டன் ஃப்ரீட்மன், நோபல் பரிசு பெற்ற பொருளியல் நிபுணர் (பி. 1912)

1945 - யுனெஸ்கோ நிறுவனம் ஆரம்பிக் கப்பட்டது.

SLIATE

# பாராட்டி வாழ்த்

## HNDA - உயர் தேசிய கண



த.குருபரன் · நா.ரஜிதாங்கினி · க.சதீபன் · ஆ.ஜீவகன் · ஏ.எஸ் திலீப்குமார் · த.அனுஷாந்தினி · க.அனுசியா · அ.கஜகோபன் · பா.வாகீசன் · சி.பாலராணி · பா.பார்த்தீபன் · பா.ஞானச்செல்வம் · பா.திபரன்

ப.கேமலதா · கி.வினோத் · ஜெ.இந்துயா · ஆ.யனனி · கு.ஜெனனி · ம.யெனீத்தா · கு.ஜீவிகா · ஜெ.மதனராஜ் · யே.ஜெயக்குமார் · து.ஜெயகௌரி · ஜெ.மாறன் · ச.அமுதரஞ்சினி · க.பாலபஷ்

த.கிருஸ்ணப்பிரியா · கு.மயூரன் · கு.கிரிசாந்தன் · கு.நவநீதன் · ச.லாலினி · கி.லீலாம்பிகை · லோ.மயூரன் · கோ.மெடோனா · சி.மரியவேஜின் · பே.மரிற்ராறொசானி · செ.மேரிஆன்சையா · தே.மேரிபிரியதர்சினி · மு.முத்தயா

இ.நிரோஜி · கு.நிஷானா · இ.நோயலின்சாந்தா · பா.மனோராஜ் · ப.ரமணக்குமார் · ப.பர்மிலா · ப.கணாநாத் · பா.பிரதீபா · நா.பிரியந்தி · சீ.பிரதீபா · பா.பிறேமினி · சி.பிரியதர்சினி · பு.புவிந்திரன்


பொ.சகிர்தினி · ச.சாருகாசினி · த.சசிதேவி · ச.சவுந்தினி · செ.கிருஸ்ணமேனன் · சி.செல்வமலர் · செ.பிரதீப் · அ.சாலினி · பெ.சாளினி · இ.சோபனா · ஸ்ரீ.ஷோபிகா · சி.ஜெயேந்திரா · ஞா.சிந்துயா

க.சுதாதேவி · அ.சுதர்சனா · தே.சுதர்சினி · த.லோகேஸ்வரன் · வி.தனுஷ்யா · சி.தாரணி · து.தாரணி · வி.அலன்ரீனா · ச.தர்சனா · த.ராஜ்பவன் · தெ.சுஜீவன் · பா.தேனுகா · தே.விஜயசந்திரா



வீ.சல்டன்குமார் · வி.தினேஸ் · வி.சத்தியப்பிரசன்னா · வி.அமிர்தரூபன் · ம.வினோதா · தி.வினோதா · யோ.ரஜீவ் · யோ.மகேந்திரன் · யோ.சதீஸ்குமார் · யோ.தனேஷ்

## HNDM -உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா



.ஆன்மக்லின் · ப.ஆன்தர்சிகா · ச.அரங்களா · பா.பாலகஜேந்தினி · பி.நிஷாந்தினி · பா.ஜனிற்றா · ச.கிஜுஜா · வ.குணதீபா · ந.லிஜினி · ப.மேரிஇமெல்டா

த.நித்தியகலா · ஞா.பிரதீபா · தே.சங்கீதா · க.சந்தியா · லோ.சாதனா · தி.ஷயந்தினி · செ.உமாசுதன் · இ.செவ்வந்தி · சி.ராஜீவன் · சி.சுதர்சன்

க.சுகிர்தா · ப.சுஹாசினி · யே.சுதர்சினி · ப.தமிழினி · க.தனுசியா · தே.தாரணி · தே.துஸ்யந்தி · ம.துஷ்ஷியா · சி.வனஜா · அ.விஸ்வரூபி

இன்று (16.11.2010) செவ்வா
கொழும்பு பண்டாரநாயக்கா ச
பத்தில் நடைபெறும் இலங்கை
நுட்பவியல் நிறுவன ஆ
வைபவத்தில் HNDA,HND
HNDBS,HNDIT,NDBS ப
யாழ்ப்பாண உயர் தொழில்
நிறுவன பழையமாணவர் சங்
மாணவர்களையும் பட்டம் பெ
மாணவர்களையும் மேலும் ப
பெற்று சிறப்படை
வாழ்த்துகின்றோ


ALUMNI ASSO
JAFFNA ADVANCED TECHNOLO
NO:665/2, BEACH R
JAFFNA
Web:- www.jatialumni.org
T.P:- 0213206542

# ழ்த்துகின்றோம்

## ர் தேசிய கணக்கியல் டிப்ளோமா



பா.திபாகரன், ந.பர்மிளா, சூ.சுகந்தினி, ச.சந்திரிக்கா, கி.டெல்சியா, சி.டுசாந்தி, இ.சிறீதரன், த.கஜத்ரா, லோ.காயத்திரி, ஞா.ஞானகலா, ஹே.ஞானச்செல்வம், கோ.கோகுலன், கு.சஜீபன்



க.பாலசுபேஷ், க.கவாஸகர், க.பிரதீபன், க.தனஞ்சயன், க.முகுந்தன், த.கபிலா, க.ஜெகரூபன், க.கவிதா, யோ.ஹேமா, இ.கேதீஸ்வரி, சி.கிருபாலினி, கி.கிருபனா, சா.கோவர்த்தனி



மு.முத்தையா, மு.கஜேந்திரராஜா, ந.மோகனதாஸன், ந.சதீஸ்குமார், ந.தவச்செல்வம், ந.உஷாபாலு, வ.நாகலோஜினி, ந.யசிகரன், து.நந்தரூபி, ந.ரமணப்பிரகாஷ், இ.நாதவர்ஷனி, வை.நவரூபி, சு.நவீனா



பு.புவிந்திரன், இ.மயூரன், இ.இராகுலன், இ.ஜெயக்குமார், இ.சிறிராசா, இ.வசீகரன், ச.ரஜினி, இ.அபிராமி, இ.விஜயரூபன், ஜெ.ரம்யா, இ.இளங்கீரன், சி.ரேஜுமதி, ச.ஜெயப்பிரகாஸ்



ஞா.சிந்துயா, ம.சிந்துயா, ப.சோபிகா, சோ.மதனரூபன், நா.சுபாஜினி, ம.சுபாகினி, பு.சுபாஷினி, த.சுபாசினி, சு.ஜனார்த்தனன், சு.காண்டீபன், செ.சுகந்தினி, நா.சுஜனி, இ.சுஜனி



த.விஜயசந்திரா, தி.சிற்சபேசன், க.திருமகள், தி.முருகதாஸ், தி.திவாகி, தி.சஞ்சீபன், து.கோபிநாத், து.ஶ்ரீதரன், ச.துசிதா, வ.தனேஸ், லோ.வைதேகி, ச.வாரனி, வீ.ஜெகன்

## HNDIT- உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா



ம.கோகுலன், க.ஜனனி, இ.ஜீவிதா, ஆ.அபிதா, கு.மதுராஜினி



செ.செல்வஜிந்தன், க.செல்வதர்சினி, செ.சிந்துஜா, இ.தர்ஷிகா, அ.திருமகள், சி.துசாந்தினி

## HNDBS - உயர் தேசிய வணிகக் கல்வி டிப்ளோமா



ப.டயாலினி, நா.காந்திமதி, ம.நித்தியா, ந.ரனித்தா, சி.சிவசௌம்யா




த.பிறேமினி, தெ.சாருகா, வை.சதீஸ்குமார், சோ.தயாபரன்NDBS

## HNDE -உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா



ஜெ.சிந்துயா, எ.எட்வினா, ச.கார்த்திகா, சே.ஹரல்டினா, இ.யூடிற்றா, கோ.கல்ப்பனா, க.மாதவன், ப.பாலமுகுந்தன், பா.பிரசாந்தினி, சி.கிரிதரன்



சூ.டக்ளஸ், இ.சுகுனா, அ.தயாளினி, வ.பாலசிங்கம், செ.வனஜா, வீ.திவ்வியநாதன், ச.விஜிதா


HNDA,HNDM,
HNDE,NDBS
HNDIT,HNDBS

010) செவ்வாய்க்கிழமை
நாயக்கா சர்வதேச மண்ட
இலங்கை உயர் தொழில்
ஆவது பட்டமளிப்பு
NDA,HNDM,HNDE,
T,NDBS பட்டம் பெறும்
யர் தொழில்நுட்பவியல்
ாணவர் சங்கஅங்கத்துவ
ம் பட்டம் பெறும் ஏனைய
ம் மேலும் பல பட்டங்கள்
சிறப்படைய
துகின்றோம்.

ASSOCIATION
TECHNOLOGICAL INSTITUTE,
/2, BEACH ROAD
JAFFNA
mni.org

# யாழில் சுற்றுலா மையங்களாக மாறும் வாழ்விடங்களும் வழிபாட்டுத்தலங்களும்

"யாழ்ப்பாணம் உங்களை அன்புடன் வரவேற்கின்றது. யாழ்ப்பாண மக்கள் அன்பானவர்கள்" இது யாழ்ப்பாணத்தின் நுழைவாயில்களில் உங்களை வரவேற்கும் பெயர்ப் பலகை வாசகர்கள். படைச் சிப்பாய்களால் ஆனையிறவில் வைத்து சிங்கள சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படும் துண்டுபிர சுரங்களிலும் இதுவே உள்ளது.



அபிவிருத்தி தொடர்பில் எவருமே எட்டிப் பார்த்திராத காரைநகர் இப்போது சிங்கள சுற் றுலாப் பயணிகளின் வருகையால் களை கட் டிப்போயுள்ளது. அவர்களை வரவேற்க, கசூ ரினா கடற்கரை வரை சீமெந்து வீதிகள் அமைக்கப்பட்டுவிட்டன. சுமார் 5 மில்லியன் செலவில் அவசர அவசரமாக அமைக்கப் பட்ட இவ்வீதியை ஆளுநர் சந்திரசிறி, அமைச் சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து அண்மையிலேயே திறந்தும் வைத்துள்ளனர்.

யாழ். நகரின் குப்பைக் குளமான புல்லுக் குளம், இப்போது புனிதமாகிவிட்டது. நீங்கள் ஓரமாக அமர்ந்து இரசிக்க, சீமெந்து மேசைக ளும் நட்டாயிற்று. அயலிலுள்ள யாழ்.கோட் டையினை மீள நிர்மாணிக்க நெதர்லாந்து அரசும் நிதி வழங்கிவிட்டது.

நயினாதிவு நாகதீப விகாரைக்கு, புதிய இறங்குதுறையும், படகு சேவையும் வந்தாயிற்று. மாதகல் திருவடி நிலைக்கு, தெல்லிப் பழையூடான காங்கேசன்துறை வீதியும் திறந்து விடப்பட்டுவிட்டது. போகும் வழியில் கீரிமலை கடலில் நீங்கள் நீராடியும் செல்ல லாம்.

குடாநாட்டில் புதிதாக முளைக்கும் பெயர்ப் பலகைகளில் பல,சுற்றுலா மையங்களாக முளைத்தவற்றை அறிவிப்பவையாகவே உள் ளன.பெரும்பாலும் முன்னணி நிறுவனங்களே இவ்வாறான பெயர்ப்பலகைகளையும் நாட்டி வைக்கின்றன.

ஏ-9 வீதி திறக்கப்பட்டு ஓராண்டு கடந் துள்ள நிலையில் சுமார் ஆறு இலட்சத்திற் கும் அதிகமான சுற்றுலா பயணிகள் யாழ்ப் பாணத்தை வந்து பார்த்து சென்றுள்ளனர். சராசரியாக யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் தொகைக்கு இது ஈடாகும். சம் வீரர்களால் இடித்தழிக்கப்பட்ட தமிழர்களது வாழ்விடங் களும் வழிபாட்டுத்தலங்களும் பயணிகளுக் கான சுற்றுலாமையங்களாக இருக்கலாம். சில வேளைகளில் புதைக்கப்பட்டிருக்கும் மிதி வெடி வலயங்களும் அவ்வாறே இருக்கலாம்.

யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி என்பது பெரிய பெரிய விளம்பரப் பலகைகளில்தான் மிஞ்சியிருக்கின்றதென்கின்றார் ஜேர்மன் நாடாளுமன்ற உறுப்பினரொருவர். அண் மையிலிலேயே அவர் யாழ்ப்பாணம் வந்து திரும்பியுள்ளார். வன்னியிலிருந்து மீளக் குடியமர வந்துள்ள குடும்பங்களில் 90 சத வீதமானவை வாழ்விடங்களின்றியே அலை கின்றன. எஞ்சிய 10 சதவீதம் கூட நண்பர் கள், உறவினர்கள் வீடுகளில் அடைக்கலம் புகுந்துள்ளன என்கின்றார் உள்ளூர் அரச சார்பற்ற அமைப்பு பிரதிநிதியொருவர்.

உயர் பாதுகாப்பு வலயங்காரணமாக வெளியேற்றப்பட்ட ஒரு இலட்சத்திற்கும் அதிக மான மக்கள் பற்றி இப்போது எவருமே கதைப்பதில்லை. உயர்பாதுகாப்பு வலய மென்ற ஒன்றே இல்லையென்றாகிவிட்டது. கைவிடப்பட்ட புகையிரத நிலையங்களிலும் கடவைகளிலும் வாழ்ந்தவர்களையும் யாழ். தேவி மீண்டும் வரப்போவதாக கூறி விரட்டி அடித்தாயிற்று.

ஆனால் அவர்கள் இப்போது என்ன செய்து கொண்டிருப்பார்களென அக் கறை கொள்ள எவருக்கும் நேரமில்லை.

2008ஆம் ஆண்டின் இறுதி வரையில் குடாநாட்டினில் மட்டும் காணாமல் போன இளைஞர், யுவதிகளின் தொகை இரண்டா யிரத்தை தாண்டியுள்ளதென்கின்றனர் மனித உரிமையாளர்கள்.... வன்னி யுத்தத்தில் காணாமல் போனவர்களின் கதை தனியா னது. இருக்கிறார்களா, இல்லையா என்பது கூட தெரியாது அலையும் அந்தத் தாய்மார் கள் பற்றியோ அல்லது இளம் மனைவிகள் பற்றியோ எவரும் அறியவே விரும்பவில்லை. அப்பா இன்றி அநாதைகளாக்கப்பட்ட அவர் களது குழந்தைகள் என்ன செய்யும்?

அகதிகளாக்கப்பட்டு,வாடகை வீடுகளில் வாழ்ந்தவர்கள் விரட்டப்படுவது தொடர்கின் றது. அவசர அவசரமாக மனைக்கு வரும் சுற்றுலாப்பயணிகள் விடுதிக்காக, அவர்கள் வெளியேற்றப்படுகின்றனர். விருந்தினர்க ளாக வரும் முதியான் சலாகேகளும், சுது பண்டாவிற்கும் அவை திறந்தே விடப்பட்டுள் ளன. விரட்டப்பட்ட அகதிக்குடும்பங்கள் பற்றி எவருக்கு என்ன கவலை. ஆனால் அவர்க ளுக்கு இப்போது அடைக்கலம் புகுவதற்கு புகையிரத கடவைகள் கூட எஞ்சியிலலை. அவை கூட இப்போ நிலம் பிடிக்க வந்தவர் களுக்கென்றாகிவிட்டது.

சுற்றுலாப் பயணிகள் சுற்றிப்பார்க்கவென புதிது புதிதாக பௌத்த விகாரைகளும் முளைத் துக்கொண்டே இருக்கின்றன. அரசமரமெல் லாம் எங்கெங்கிருக்கின்றதோ அங்கெல் லாம் புத்தர் அவதரித்துக் கொண்டிருக்கின் றார். ஆரியகுளம், நயினாதீவு, திருவடி நிலை, கந்தரோடையென அந்த பட்டியல் நீள் கின்றது. புனித தலங்கள் புது புதிதாக தோன்ற அவற்றிற்குச் செல்லும் வீதிகள் அலங்காரம் காண்கின்றன. அருகருகே கடைகளும் முளைக்கின்றன. இவ்வாறான கடைகள் கூட தெற்கிலிருந்துதான் வந்து சேர்வது தான் வேடிக்கையானது.

1990 ஆண்டு இடம்பெற்ற இராணுவ நட வடிக்கை காரணமாக ,சின்னாபின்னமாகி போன காரைநகர் இன்றுவரை இயல்புக்கு திரும்பவில்லை. ஆட்களரற்றதாகவே பெரும் பாலான வீடுகள் இன்றும் உள்ளன. கசூரினா கடற்கரைக்கு வேக வேகமாக வந்துசெல்லும் சுற்றுலா பயணிகள் வாகனங்கள் தவிர, அங்கு எல்லாமே வெறுமையாக இருக்கின் றன.

மாதகல் திருவடிநிலைப் பகுதி இன்னும் உயர் பாதுகாப்பு வலயமாகவே இருக்கின் றது. அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் சொல்வது போன்று கண்ணிவெடி அபாய முள்ள பகுதி. ஆனாலும் கண்ணிவெடி அபா யம் பற்றியெல்லாம் அலட்டிக்கொள்ளாமல் முதல் பெண்மணி சிராந்தி ராஜபக்ஷ அங்கு வந்து திரும்பியுள்ளார்.

நாள்தோறும் நூற்றுக்கணக்கில்,சில வேளைகளில் ஆயிரக்கணக்கிலும் அங்கு வந்து திரும்பும் சிங்கள சுற்றுலாப் பயணிக ளுக்கு மட்டும் கண்ணிவெடி அபாயமென எதுவுமே இல்லை.

ஆனாலும் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்ட பூர்வீகக் குடிகளால் தெல் லிப்பழைக்கப்பால் வெறுமனே வேடிக்கை பார்க்க மட்டுமே முடிகின்றது.


யாழ்ப்பாணத்தில் ஒட்டுமொத்த சனத் தொகையில் 40 வீதமான குடும்பங்கள் இன்றுவரை தமக்கென வீடின்றியே வாழ் கின்றன. வன்னி இடப்பெயர்வு, உயர் பாதுகாப்பு வலயம், யுத்த அழிவுகள், சுனாமியென அவர்களது சொந்த வீடுகள் இல்லாமல் போனது.

அபிவிருத்தியென்று சொல்லிக் கொள்ளத்தக்கதாக கடந்த ஒருவருடத்தினில் எதுவுமே நடந்திருக்கவில்லையென்கின்றன சிவில் சமூக அமைப்புகள்.உலக உதவியுட னான ஒரு சில வீதி விஸ்தரிப்புக்கள் தவிர எதுவு மேயில்லை. அரசும் கூட எட்டிப் பார்க்கவில்லை.

ஆனால் சுற்றுலாப் பயணிகளைக் கவ ரவென கந்தரோடையிலும், காரை நகரிலும் வீதிகள் அவசர அவசரமாக தார் பூசி அழகு படுத்தப்படுகின்றது. உள்ளூர் வீதிகளோ 30 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படவே யில் லையென வீதிகளை பட்டியல் இடுகின்றன நாளிதழ்கள். அதற்கும் யுத்தத்தால் நிதி ஒதுக் கீடு இல்லையென்கின்றது அரசு.

தரைவழித் தொடர்புகள் ஏதுமற்ற தீவகப் பகுதிகளுக்கு செல்லும் படகுகள் அடிக்கடி நடுக்கடலில் நின்றுவிடுகின்றன. நூற்றுக் கணக்கான பயணிகள் நாள்தோறும் உயிரை பணயம் வைத்து பயணிக்கின்றார்கள். நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் எழுவைதீவு, அனலைதீவென பல பகுதிகளிலும் வாழும் மக்கள் இந்த படகுகளை நம்பியே வாழ வேண்டியுமிருக்கின்றது. நடுக்கடலில் பய ணிகள் படகுகள் நின்று விடுவதும், பின்னர் மீனவர் படகுகள் கட்டியிழுத்து செல்வதும் தொடர் கதையாகி விட்டது.

யாழ்ப்பாணத்தில் வதியும் குடும்பங்களுள் சுமார் 30 சதவீதமான குடும்பங்கள் விதவைகளையே குடும்பத்தலைவர்களாக கொண் டுள்ளன.அரசினால் வழங்கப்படும் ஆயிரத் திற்கும் குறைவான உதவு தொகையுடனேயே அவர்களது வாழ்க்கை தொடர்கின்றது.



ஒட்டுமொத்தத்தில மக்களிடையே இய லாமை வெறுப்பு கலந்த வாழ்க்கையொன்றே தொடர்கின்றது. அவர்களால் சுற் றுலா வரும் சிங்கள பயணிகளை வேடிக்கை பார்க்க மட் டுமே முடிகின்றது.

ஆனாலும் சிங்கள சுற்றுலாப் பயணிக ளுக்கோ யாழ்ப்பாணம், புதினம் பார்க்க

**தயாபரன்**

நன் றாகவே இருக்கின்றது. மிருகக்காட்சிசாலையில் கூட்டினுள் அடைக்கப்பட்ட மிருகங்களை பார்க்க எவருக்குத்தான் விருப்பமில்லை. அவை கடிபடும். ஒன்றோடொன்று அடிபடும். உங்களை வரவேற்கும். மாலை போடும்....

# யாழ்ப்பாணத்தில் அரைவாய்மொழிப் பாடல்கள்

05

**கடந்த செப்ரெம்பர் மாதம் 13ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தமிழ்த்துறை கருத்தரங்கில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவினால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

பாடல்கள் பின்வருமாறு :-

*தேடுதற்கும் வகையறியேன் – உன்*
*திருக்கோயில் தவறணையைத் தேடிக்*
*கொண்டு*
*ஓடிவரும் பக்தருக்குக் குறைவேயில்லை*
*உன்னுடைய கிருபையினைச் சொல்லிச்*
*சொல்லிப்*
*பாடுதற்கும் வகையறியேன் பாளைவேந்தா!*
*பாவிகளை மகிழ்விக்கும் பானதேவா!*
*நீடுலகில் எம்போன்ற ஏழைகட்கு*
*நீயின்றி யாருதவி சொல்லுமையா!*

இப்பாடலைத் தேவாரம் என்று கூறியவர், அடுத்துப் புராணத்தைக் கூறினார்.

*சண்டையில் பிறப்பாய் போற்றி!*
*சல்லியைப் பறிப்பாய் போற்றி!*
*பண்டைய முதல்வா போற்றி!*
*பாளையிற் பிறப்பாய் போற்றி!*
*மண்டையை உடைப்பாய் போற்றி!*
*மாதரைக் கெடுப்பாய் போற்றி!*
*கண்டவர் சிரட்டை ஏந்தும்*
*கடவுளே போற்றி! போற்றி!*

(தகவல் ச.சி.பரஞ்சோதி– அல்வாய்)

நல்ல கவித்துவப் பரீட்சயமுள்ள ஒருவராலே தான் இத்தகைய பாடல்களை இயற்ற முடியும். மதுவின் தீமையைக் கண்டித்துப் பாடிய அரைவாய்மொழிப் பாடல்கள் பல இன்றும் வழங்கி வருகின்றன. குறிப்பாகச் சாராயம், விறண்டி, விஷ்கி முதலான மேனாட்டுக் குடி வகைகளைப் பாவிப்பதை மிக வன்மையாகக் கண்டித்துப் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

சமூக மாற்றத்தினை ஏற்றுக் கொள்ளத் தயங்கும் வகையிலான அரை வாய்மொழிப் பாடல்கள் பல யாழ்ப்பாணத்திலே தோன்றியுள்ளன. உணவு, உடை, உறையுள் என்ற வகையிலே புதியதாக வந்த விடயங்களை நையாண்டி செய்யும் பல அரைவாய் மொழிப் பாடல்கள் தோன்றியுள்ளன. கோப்பி, தேநீர், கோதுமைமா பாவனை முதலானவற்றைப் பற்றிப் பல பாடல்கள் வழங்கி வருகின்றன. பொன்னாலைக் கிருஷ்ணன் பாடி வெளியிட்ட தாலபுரத்தர் கீதம் என்னும் நூலில் இடம்பெற்ற பின்வரும் பாடலைச் சுட்டிக் காட்டலாம்.

*"வந்தம் மாவும் வழுவி – எங்க*
*சொந்தம் மாவும் நழுவி*
*மந்த மாகத் தழுவி – கோ*
*விந்த மாகப் புழுகி – கோ*
*தம்ப மாவும் வந்திருக்கிறா – அவவும்*
*நிந்தமல்லச் சொந்தம்மாவைப் பார்"*

கோதுமை மா பாவனைக்கு வந்த காலத்திலே யாழ்ப்பாணத்தவர்கள் அதனை வரவேற்கவில்லை என்பதைப் பல செவிவழிக் கதைகளும் நிறுவுகின்றன. பனம் பண்டங்களை முதன்மைப்படுத்திப் பல பாடல்கள் தோன்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் எழுந்த பல அரை வாய்மொழிப் பாட்டுப் புத்தகங்களைப் பார்க்கும் பொழுது நவீனத்துவத்தை எதிர்த்தமையே மேலோங்கிக் காணப்படுகின்றது.

கலிகால வேடிக்கை, கலிகாலக் கும்மி, கலிகால அலங்கோலம், கலிகாலக் காட்சி முதலான பெயர்களிலே பல சிறுசிறு நூல்கள் தோன்றியுள்ளன. கலிகாலம் பற்றிய கருத்துநிலை நமது மரபிலே வேரூன்றியுள்ளமையே இப்பாட்டுப் புத்தகங்களின தலைப்புக்கள் காட்டி நிற்கின்றன. உதாரணமாக,

*"கலியுகக் காலம் கொடுமை வருமென்று*
*கையிற் கனிபோலச் சொன்னார்–முனிவர்கள்*
*பலவிதத் தாலு மதிகபழுது*
*வருகுது பாரெடி ஞானப் பெண்ணே!*

(உத்.லக்ஷ்ணக் கும்மி)

மண்டைதீவு அகிலேச சர்மா, கட்டை ஆழ்வார் என அழைக்கப்பட்ட ஜே.எஸ். ஆழ்வாப்பிள்ளை, கிருஷ்ணாழ்வார், பொன்னாலைக் கிருஷ்ணன் முதலானவர்களை அரைவாய்மொழிப் பாடல்கள் பாடியவர்களாக அடையாளங்காண முடிகின்றது.

கிறிஸ்தவக் கல்விக்கு எதிராக இப்படிப் பல அரைவாய்மொழிப் பாடல்கள் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


தற்கால நாகரிக வேடிக்கைப் பாக்கள் (1933) என்னும் சிறு நூல் பன்னிரண்டு பக்கங்களைக் கொண்டது. நூலின் மூன்றாம் பாகம் என அச்சிடப்பட்டுள்ளது. அந்நூலில் இடம்பெறும் சுதேசிய உணவை வலியுறுத்தல், சுதேச ஆடை, ஆபரணங்களை விலக்குவதால் வருந்தீமை முதலானவற்றையே பாடுபொருளாகக் கொண்டுள்ளன. வகைமாதிரிக்குப் பின்வரும் பாடல்களைச் சுட்டிக் காட்டலாம்.

"அற்புத மற்புத மற்புதமாகிய றப்பர்த் தோட்டம்" என்ற மெட்டு,

*நாட்டிற் கள்ளை வேண்டா மென்று*
*தள்ளுகின்றார் – இப்போ*
*நாகரிக உவிஸ்கி குடித்துத்*
*துள்ளுகின்றார்*
*வீட்டிற் காசை அந்நியர் கையிற்*
*கொட்டுகின்றார்*
*விறண்டிப் பெட்டிக்காகத் தீர்வைக்*
*கட்டுகின்றார்.*

இவ்வாறு பாடல்கள் இடம் பெற்றுள்ளன

பெண்களின் நடையுடை பாவனை பற்றி நையாண்டி செய்யும் அரைவாய் மொழிப் பாடல்கள் உளவேனும், வகைமாதிரிக்கு ஒன்று, "காலக் கொடுமையை நாளுக்கு நாளாக" என்ற மெட்டு,



*கோலக் குயில்மொழி சேலைப் பழிவிழி*
*வாலைப்பெண்க ளலங்காரம் – இந்தக்*
*காலத்திலே மஸ்லின்சேலை யுடுத்திடுவர்*
*காட்சி கொடுத்தல் சிங்காரம்*
*பட்டினாங் காப்புக்கல் லட்டியல் தோட்டுக்குங்*
*கெட்டகாலம் வந்துபோச்சே – இப்போ*
*கெட்டிக் கொலிசொடு கொத்தமல்லிக் காப்புக்*
*கஷ்டமான காலமாச்சே*

இவ்வாறு பல பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

**பேராசிரியர்**
**எஸ்.சிவலிங்கராஜா**

மேலைப்புல நர்கரிகத்தின் தாக்கத்தினைக் கண்டிப்பதற்கு வாய்ப்பாகப் பெண்களின் நடையுடை பாவனையைப் பெரும்பாலான அரைவாய் மொழிப் புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர். நம்மால் சேகரிக்கப்பட்ட பாடல்களில் இத்தன்மைத்தான பாடல்களே அதிகமாகக் காணப்படுகின்றன.

காலனித்துவத்தை எதிர்ப்பதில் செந்நெறிப் புலவர்களைவிட அரை வாய்மொழிப் பாடலாசிரியர்கள் அதிகமாக ஆர்வங்காட்டி னார்கள் எனக் கருதலாம். (தொடரும்)

## நல்லிணக்க ஆணைக்குழுவில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் சாட்சியமளிக்கும்

### அமைச்சர் றிசாட் தெரிவிப்பு



(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் சாட்சியமளிக்கும் என அக்கட்சியின் தலைவரும் அமைச்சருமான றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

எமது கட்சி சாட்சியமளிப்பது குறித்து ஏற்கனவே ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளோம். இந்நிலையில் ஆணைக்குழுவின் நேர ஒதுக்கீட்டுக்காக எமது கட்சி எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சாட்சியமளிக்கவுள்ளார்.

கடந்த 2002 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆண்டு மே மாதம் வரையிலான காலப் பகுதியில் நாட்டில் இடம்பெற்ற சம்பவங்களிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் குறித்து ஆராய்வதற்காக முன்னாள் சட்டமா அதிபர் சீ.ஆர்.டி.சில்வா தலைமையில் 8பேரைக் கொண்ட இவ் ஆணைக்குழுவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ–2)

## இலங்கையின் பொருளாதார வளர்ச்சி பாராட்டுக்குரியது

### சிங்கப்பூர் பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி பாராட்டுக்குரிய வகையில் அமையப் பெற்றுள்ளதாக சிங்கப்பூரின் பிரதமரும், பாதுகாப்பு அமைச்சருமான தியோ ச்சீ ஹெயின் தெரிவித்துள்ளார்.

சீனாவிற்கு அடுத்த படியாக ஆசியாவில் துரித கதியில் பொருளாதார அபிவிருத்தி எட்டும் நாடாக இலங்கை திகழ்கின்றதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தெற்காசிய சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று தசாப்தகாலமாக இடம்பெற்ற யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து இலங்கை பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நகர்ந்து வருவதாகவும் பிரேஸிலைப் போன்று இலங்கையிலும் கல்வியறிவு அதிகளவில் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் பால்நிலை சமத்துவம் சிறந்த முறையில் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ)

## இந்துசமய பொது அறிவு போட்டிக்கான பரிசளிப்பு விழா


(கொழும்பு)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே சமய அறிவை ஊக்குவிக்கும் பொருட்டு ஆண்டு தோறும் இந்துசமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சையை நாடளாவிய ரீதியில் நடத்தி வருகின்றது.

இதற்கமைய இவ்வாண்டுக்கான போட்டியானது கடந்த யூன் மாதம் 26 ஆம் திகதி அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்டது. இப் பரீட்சையில் மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் அதி உயர் புள்ளிகளைப் பெற்றுள்ள மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.


இதனை முன்னிட்டு நாளை புதன்கிழமை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் பெரிய மண்டபத்தில் காலை 10 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை இப் பரிசளிப்பு விழா வைபவம் இடம்பெறவுள்ளது.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக புத்த சாசன மற்றும் மத விவகார பிரதி அமைச்சர் எம்.கே. ஏ.டி.எஸ்.குணவர்த்தன கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கவுள்ளார் என இத் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ–2)



யாழ்.கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.இந்நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) செ. உதயகுமார் உரையாற்றுவதையும் அருகில் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் மு.சின்னராசா, அதிபர் பா.வெற்றிவேல், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.தபேந்திரராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:–அல்வாய் செய்தியாளர்)

# முதுமையில் கூன் விழுவது ஏன்?




**முதுகெலும்பு பழுதுபாடு**

முதலில் கழுத்துப் பகுதியில் உள்ள முதுகெலும்புகள் (வம்சிகள்) பழுதுபடக் காரணம் தலையில் அதிக பளு தூக்குவது. மேலும் கவிழ்ந்த நிலையில் நீண்டநேரம் வேலை செய்வது போன்ற காரணங்களால் கழுத்து வம்சிகள் குறிப்பாக 6 ஆவது மற்றும் 7ஆவது (C6,C7) (Cervicial vetebrae) வம்சிகள் பாதிக்கப்பட்டு, சிலசமயம் முதுகு எலும்பு தேய்மானம் ஏற்பட்டு அதன் விளைவாக கழுத்து முன்னுக்குத் தள்ளப்பட்டு அதன் இயல்பான (normal posture) நிலையிலிருந்து மாறி கூன் விழுந்தது போன்ற தோற்றத்தைத் தருகிறது.

நாம் ஒவ்வொருவருமே முதுமை என்ற ஒன்றை நோக்கி அன்றாடம் பயணம் செய்துகொண்டிருக்கிறோம். முதுமை வந்துவிட்டால் அதில் கூன் விழுதல் நிகழ்வு இயல்பான ஒன்று. முதுமையில் கூன் விழுதலுக்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றில் மிக முக்கியமான ஒன்று முதுகெலும்பு பழுதுபாட்டால் (Degeneration of Vertebrae) வருவதாகும்.

இதேபோல் வயது முதிர்ந்த காலத்தில் இடுப்புப் பகுதியில் உள்ள வம்சிகளில் (Lumber Vertebrae) வரும் பழுது மற்றும் தேய்மானம் வழக்கமானது.

குறிப்பாக 4,5 ஆவது இடுப்பு வம்சிகளில் ஏற்படும் பாதிப்பு மிகவும் சாதாரணமான ஒன்று.

**பழுது பாடுகளுக்கான பொதுவான காரணங்கள்**

- அதிகப்படியான பளு தூக்குதல்
- இயந்திரங்களில் அதிகநேரம் பணியாற்றுதல்
- அதிகமான இரண்டு, நான்கு சக்கர வாகனங்களை உபயோகித்தல்.
- பொருத்தமில்லாத இருக்கைளில்
- நீண்ட நேரம் அமர்ந்துவேலை செய்தல்
- புகைப்பழக்கம்
- மது,போதைப் பழக்கம்
- மன உளைச்சலுடன் நீண்டநேரம் பணியாற்றுதல்
- மிகுந்த கோபம்,தாழ்வு மனப்பான்மை
- விபத்தால் முதுகுப் பகுதியில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டிருத்தல்.

**வம்சிகளின் இடைத்தட்டு பிறழ்ச்சி**

பொதுவாக இடுப்பு வம்சிகளில் ஒரு வம்சிக்கும் மற்றொரு வம்சிக்கும் இடையில் இருக்கும், வம்சி இடைத்தட்டானது அடிபடும் போதும் அல்லது மேற்சொன்ன பல காரணங்களினாலும், தான் இருக்கும் இயல்பான இடத்திலிருந்து விலகிவிடுகிறது.

இதனால் மேலும் கீழும் இருக்கும் வம்சிகள் நேரடியாக ஒன்றுடன் ஒன்று உராய்வதால் அது நாளடைவில் எலும்புத் (Erosion) தேய்மானம் ஏற்பட்டு முதுகெலும்பு அமைப்பு இயல்பான நிலையிலிருந்து (Posture) விலகி சற்று முன்னோக்கி சாய்ந்து கூன் போன்ற தோற்றத்தைத் தருகிறது.

**எலும்புகளின் துணை வளர்ச்சி**

சில நேரம் இந்த வம்சிகளுக்கு அருகில் ஒரு சிறு எலும்புத் துண்டு வளர்ந்து (Osteophytes) அது நாளடைவில் வம்சித் துளை (Inter vertebral foraman) யை சூழ்ந்து வளர்ச்சி அடைவதால் அப்பகுதியில் உள்ள நரம்புகள் அழுத்தப்பட்டு மிகுந்த வலியை உண்டாக்குகிறது.




**காசநோயினால் கூன் விழுதல்**

50 வீதம் , காசநோயின் காரணமாக முதுகெலும்பு பாதிக்கப்பட்டு அவை பழுதாகி அதன் இயல்பான நிலை மாறி கூன் விழுவதற்கு காரணமாகிறது.

**சத்துப் பற்றாக்குறை**


வயதான காலங்களில் விற்றமின் மற்றும் கல்சியம் சத்து போதியளவு கிடைக்காமல் போவதால் எலும்புகள் வன்மை குன்றி மெலிவுற்று (Osteoporosis) அதனாலும் கூன் விழுவதற்கு காரணமாகிறது.

**கூன் விழுவதைத் தடுக்கும் வழிகள்**

- கவிழ்ந்த நிலையில் செய்யும் வேலைகளைத் தவிர்க்கலாம்.
- சற்று மல்லாந்து படுத்து ஓய்வு எடுக்கலாம்.
- வயது முதிர்ந்த காலத்தில் வாதத்தை மிகுதிப்படுத்தும் உருளைக்கிழங்கு, வாழைக்காய் போன்றவற்றையும், வாதம் உண்டாக்கும் பருப்பு வகைகளையும் தவிர்க்கலாம்.
- அடிக்கடி வெந்நீர் ஒற்றடமிடுதல் நல்லது.

# வேர்க்கடலை சாப்பிடுவோம்!

எங்கும், எப்போதும் எளிதில் கிடைக்கும் வேர்க்கடலையில் (கச்சான்) சத்துகள் நிறைந்து காணப்படுகின்றன.இதில் உள்ள புரதம் சரி விகிதமாக அமைந்துள்ளது.எனவே, குழந்தைகள் வளர்ச்சிக்கு இது மிகவும் உதவுகிறது.



சோயா பீன்ஸிற்கு அடுத்து தரமான உயர்ந்த புரதமும், முட்டையில் உள்ளதை விட இரண்டரை மடங்கு அதிகமான புரதமும் வேர்க்கடலையில் உள்ளது.

மூளைச்சுறுசுறுப்பிற்கு உதவும் பொஸ்பரஸ், பற்கள் மற்றும் எலும்புகளின் பலத்திற்கு தேவையான கல்சியம், இரும்புச் சத்து, விற்றமின் ஈ, நியாஸின் போன்ற விற்றமின்களும் வேர்க்கடலையில் உள் ளன.

ஒபிசிட்டி பிரச்சினை உள்ளவர்கள், உணவைக் குறைத்து உடல் மெலிய விரும்புபவர்கள், சாப்பாட்டு நேரத்திற்கு ஒரு மணி நேரம்முன்பாக ஒரு கைப்பிடி அளவு வறுத்த வேர்க்கடலையைச் சாப்பிடவும். இத்துடன் சீனி சேர்க்காத கோப்பி அல்லது டீ அருந்தவும். பின்னர் ஒரு மணி நேரம்கழித்துச் சாப்பிட அமர்ந்தால், உணவை அதிகளவில் சாப்பிட முடியாது. குறைந்த அளவே உணவை சாப்பிட முடியும். இவ்வாறாக உடல் எடை யையும் குறைக் கலாம்.

வேர்க்கடலையில் உள்ள நியாஸின், தோலில் உள்ள புண்கள், கொப்புளங்கள் ஆற உதவுவதோடு, இவை வராமல் முன்கூட்டியே தடுக்கவும் செய்கிறது.தோலை பளபளபாக்குவதிலும் வேர்க்கடலைக்கு முக்கிய பங்கு இருக்கிறது.




# மருத்துவ இலைகள்!

பழங்காலத்தில் இலைகள் பெரும்பாலும் மருந்தில் மூலக்கூறுகளாக பயன்படுத்தப்பட்டன. நமக்கு எளிதாகக் கிடைக்கும் சில இலைகளின் அபூர்வ மருத்துவ பயன்களைத் தெரிந்து கொள்ளுங்கள்.




❖ செம்பருத்தி இலைகள் மற்றும் பூக்கள் மிகுந்த மருத்துவப் பயன்கள் கொண்டவை. இலைகள் தசைவலியைப் போக்குவ தோடு தசையை மிருதுவாக்கும் தன்மை யும் உடையவை. வழுவழுப்பான தன்மை கொண்ட இலையின் சாறு தலைவழுக்கை மற்றும் கூந்தலைக் கறுப்பாக்க உதவுகிறது. பூக்கள் குளிர்ச்சி பொருத்தியதால் சருமம் அழகாகும். சிவப்பு பூக்கள்தான் மருத்துவ சிறப்பு வாய்ந்தவை. செம்பருத்திப் பூவில் தங்கச் சத்து உண்டு என்று மருத்துவ சாஸ்திரங்கள் கூறுகின்றன. இப்பூக்கள் இதயக் கோளாறையும், கர்ப்பக் கோளாறையும் நீக்கிவிடும்.



❖ துளசி இலையில் புரதம், கார்போஹைட்ரேட், அமிலச் சத்துக்கள் மற்றும் உலோகச் சத்துக்கள் நிறைந்து காணப்படுகின்றன. துளசி வேர்ப் பட்டைத்தூள் அரை டிஸ்பூன் வீதம் சாப்பிட்டு வந்தால், உடலில் ஏற்படும் அரிப்பு, தடிப்பு குணமாகும். நாக்கில் தோன்றும் எல்லா வித குறைபாட்டையும் நீக்கும் குணம் உடையது. சருமத்தை சுத்தம் செய்து மென்மை தரக்கூடியது.

❖ வேப்பிலையை அரைத்து சாற்றை முகப்பருக்களுக்கு தடவி, உள்ளுக்கும் சாப்பிட்டு வந்தால் முகப்பருக்கள் மறையும். ஒரு பிடியளவு வேப்பிலையில் கஸ்தூரி மஞ்சள் சிறிது சேர்த்து மைப்போல அரைத்து முகத்தில் பூசி ஒரு மணிநேரம் கழித்து கழுவி வர, அம்மை வடு மறையும். வேப்பம்பூவை காய்ச்சி, அதனுடன் நெல்லிக்காய் சாறு மற்றும் தேன் கலந்து சாப்பிட்டால் சரும நோய்கள் நீங்கும்.



❖ கறிவேப்பிலையிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய்,அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பிலும் பயன்படுத்தப்படுகிறது. இது சோப்புக்களில் வாசனையை நிலைக்கச் செய்யும். தலைமுடி நரைப்பதைத் தடுத்து கேசத்திற்கு ஆரோக்கியத்தை அளிக்கும். கறிவேப்பிலை, மருதாணி இலை, கரிசலாங்கண்ணி இலையின் தண்டு, வேப்பிலையின் கொழுந்து சிறிது சேர்த்து அரைத்து தலையில் பூசி வந்தால் நரை மறையும்.

❖ கொத்தமல்லி இலையின் சாறை சருமத் தின் சொரசொரப்பான பகுதிகளில் காலையில் தேய்த்து, மாலையில் குளித்து வந்தால் தோல் தடிப்பு மாறி வழவழப்பாகும். கொத்தமல்லி இலையை வாயில் போட்டு மென்று வந்தால் வாய் துர்நாற்றம் நீங்கும். கொத்தமல்லி தைலத்திலிருந்து தயாரிக்கப்பட்ட சோடிய உப்பு நறுமணம் கொண்டது.வாசனைப் பொருட்களில் அதிக அளவில் கொத்தமல்லி பயன்படுகிறது.

❖ தேயிலையில் இருக்கும் "கபின்" என்ற பொருள் நரம்பு மண்டலத்தின் செயலை ஊக்குவிக்கிறது. கிரீன் டீ எனகுறிக்கப்படும் தேயிலை தற்போது அழகுசாதனப் பொருட்களில் பங்கு வகிக்கிறது. தேயிலையில் விற்றமின்கள், தாது உப்புக்கள் மற்றும் நோயை தடுக்கக்கூடிய "அன்டி அக்ஸிடென்டுகள்" உள்ளன. மூளையை ஊக்கப்படுத்துதல், ஞாபக சக்தி, இளமையைத் தக்க வைத்தல், ஆரோக்கியம் ஆகியவை தேயிலைக்கு உரிய குணங்கள். பற்சிதைவு போன்ற பல் தொடர்பான நோய்களைத் தடுக்கும் விற்றமின் சி, டி, கே மற்றும் ப்ளொரைடுகள் ஆகியவை இதில் அதிகம் உள்ளன

# மெக்ஸிக்கோவில் வெடிப்பு சம்பவத்தில் ஏழு பேர் பலி

மெக்ஸிக்கோ நட்சத்திர விடுதி ஒன்றில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவமொன்றில் ஏழு பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கொல்லப்பட்டவர்களில் ஐந்து கனேடியர் கள் அடங்குவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த சம்பவத்தில் மேலும் இரண்டு விடு திப் பணியாளர்களும் கொல்லப்பட்டதுடன் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் கனடா மற்றும் அமெரிக்கப் பிரஜைகள் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எரிவாயு சிலிண்டர் வெடிப்பினால் இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என சந்தே கம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வெடிப்புச் சம்பவம் குறித்து விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

உரிய முறையில் விடுதிக் கட்டடம் அமைக் கப்படாத காரணத்தினால் இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகம் வெளி யிடப்பட்டுள்ளது.

விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ)

## சந்திரனில் தண்ணீர் மட்டுமல்ல;

# வெள்ளி,காபனீரொட்சைட் உள்ளிட்ட கனிமங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன



பூமியில் இருந்து 2 இலட்சத்து 50 ஆயி ரம் மைல் தூரத்தில் உள்ளது சந்திரன். மனித ர்கள் வாழ்வதற்கு மிகத் தேவையான காற்று, தண்ணீர் ஆகியவை இல்லை. எனவே, சந் திரனுக்கு செல்வது இயலாத செயல் என்று ஒரு காலத்தில் கருதப்பட்டது. சமீபத் திய ஆய் வுகள் மூலம் சந்திரனில் தண்ணீர் இருப்பத ற்கான வாய்ப்பு இருப்பது அறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் தண்ணீர் மட்டும் இல்லா மல் வெள்ளி, காபனீர்றொட்சைட்டு உள்ளிட்ட கனிமங்களும் அதிகளவில் அங்கு கலவை யாக இருப்பது தற்போது கண்டு பிடிக்கப்பட் டுள்ளது. அமெரிக்கா மற்றும் ரஷ்யா மனி தனை சந்திரனுக்கு அனுப்ப முயற்சி செய்து வந்தன.

இதில் அமெரிக்கா முதலில் வெற்றி பெற் றது. கடந்த நூற்றாண்டில் 1969 ஆம் ஆண்டு ஜூலை 21 ஆம் திகதி அமெரிக்க விண்வெளி வீரர் ஆம்ஸ்ட்ரோங் சந்திரனில் இறங்கி சாத னை படைத்தார். இதை தொடர்ந்து பல முறை விண்வெளி வீரர்கள் ஆளில்லாத றொக்கெட்டுகள் பறக்க விட்டு சந்திரனில் பல் வேறு சோதனைகள் செய்யப்பட்டுள்ளன. கடந்த 2008 ஆம் ஆண்டு ஒக்டோபரில் சந் திரனுக்கு சந்திரயான்-1 என்ற றொக்கெட்டை இந்தியா வெற்றிகரமாக அனுப்பி சாதனை செய்தது.

சந்திரனை சுற்றி வந்த சந்திரயான்-1றொக் கெட் பல்வேறு கோணங்களில் சந்திரனை படம் எடுத்து அனுப்பியது. அதை ஆய்வு செய்த விஞ்ஞானிகள் சந்திரனில் தண்ணீர் உள்ளது என்று கண்டு பிடித்தனர். இந்நிலை யில் சந்திரனில் அதிகளவில் தண்ணீர் உள் ளது என்று தெரிய வந்தது.

மேலும் பல்வேறு தனிமங்களும் உள் ளன என்றும் குறிப்பாக வெள்ளி ,காபனீரொட் சைட் ஆகியவை அதிகளவில் கலவையாக இருப் பது உணர்வுசெயற்கைக்கோளை கடந்த ஆண்டு சந்திரனில் மோதச் செய்து அதன் மூலம் எடுக்கப்பட்ட படங்களை ஆய்வு செய்ததன் மூலம் தற்போது தெரிய வந்துள்ளது.

இது குறித்து சந்திரனை ஆய்வு செய்யும் விஞ்ஞானிகள் கூறியதாவது, சந்திரனில் லேசான ஐதரோ காபன்கள், கந்தகம், காபனீரொட்சைட் ஆகியவை இருப்பது உணர்வு செயற்கைக்கோள் மோதியதில் தெரிய வந்துள்ளது.

சந்திரனில் காணப்படும் பெரிய பள்ளங் களில் தண்ணீர் அதிகமாக இருப்பதும் அந்த பள்ளங்களின் பரப்பில் 5.6 சதவீதம் தண் ணீர் இருக்கும் என்றும் மதிப்பிடப்படுகிறது. இதுவரை சந்திரனைப் பற்றி தெரியாத நிலை யில் உணர்வு செயற்கைக்கோள் சந் திரனின் இருட்டுப் பகுதியில் மோதிய வேக த்தில் 10 கி.மீ. உயரத்திற்கு தூசிகள் கிளம் பின. இதில் உறை நிலையில் நிரந்தரமாய் தண்ணீர் இருக்கலாம் என்று ஊகிக்கப்படு கிறது. சந்திரனின் தென் துருவப் பகுதியில் காண ப்படும் ***கேபஸ்*** என்ற பெரும் பள்ளத்தில் இருந்து எழும் தூசிகள் குறித்த தகவல்களை அறிய உலகின் பல இடங்களில் உள்ள தொலை நோக்கிகள் செயற்பட்டு வருகின்றன.

சந்திரனில் பலமுறை விண்கற்கள் மோதி பெரும் பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே, சந்திரனில் காணப்படும் நூறு கிலோ மீற்றர் அகலம் நான்கு கி.மீ ஆழம் உள்ள பெரும் பள்ளத்தில் றொக்கெட்டை மோத விட்டு ஆய்வு செய்ய நாசா நிறுவனம் முடிவு செய் துள்ளது. இதற்காக 585 கிலோ எடையில் றொக்கெட் தயாரிக்கப்படுகிறது. இந்த றொக் கெட் சந்திரனில் காணப்படும் பெரும் பள்ளத் தில் இரண்டு மீற்றர் ஆழத்தில் மோதுவதால் ஏற்படும் விளைவுகள் குறித்து ஆய்வு செய் யப்படும் என விஞ்ஞானிகள் கூறியுள்ள னர். (ஸ்ரீ-2)






ஆப்கானிஸ்தானில் தலிபான் வேட்டையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் மீது, ஜலதாபாத் பகுதியில் நேற்று முன்தினம் பயங்கரவாதிகள் வெடிகுண்டு தாக்குதல் நடத்தினர். இதில், மூன்று வீரர்கள் பலியாகினர். நேட்டோ படையினருக்கு எரிபொருள் வழங்கும் வாகனங்கள் மீது குண்டு வீசப் பட்டதால், கரிய புகையுடன் தீ கொழுந்து விட்டு எரிந்தது.

# பேஸ்புக்கின் இ-மெயில் சேவை விரைவில் ஆரம்பம்

(வோஷிங்டன்)

சோஷியல் நெட்வேர்க் இணையத்த ளங்களின் ஜாம்பவானாக திகழும் பேஸ்புக் விரைவில் இ-மெயில் சேவையை ஆரம்பிக் கவுள்ளது.

இது மைக்ரோசொப்ட், யாகூ, கூகுள் உள் ளிட்ட பல முன்னணி நிறுவனங்களுக்கு கடும் போட்டியாக அமையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. ஆனால் இது குறித்த அறிவிப்பு பேஸ்புக் தரப்பிலிருந்து வரவில்லை.

இந்நிலையில் அமெரிக்காவின் சிலிக் கான வேலி பகுதியில் இருந்து வெளியாகும் தொழில்நுட்ப வலை இதழான டெக்கிரஞ்ச்சில் இது குறித்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவித்துள்ளதாவது, சான்பிரான் சிஸ்கோ நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வெப் பேஸ்டு இ-மெயில் சேவையை பேஸ் புக் ஆரம்பிக்க இருப்பதாகவும் இந்த மெயில் அட்பேஸ்புக்.கொம் என்று முடியுமாறு வடிவ மைக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள் ளது. பேஸ்புக்கிற்கு சர்வதேச அளவில் 500 மில்லியன் பயனாளர்கள் இருப்பதாகவும் மற்ற முன்னணி நிறுவனங்களான கூகுள், யாகூ, மைக்ரோசொப்ட் நிறுவனங் களை முறியடிக் கும் பொருட்டு இந்த சேவை ஆரம்பிக்கப்பட வுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது. (ஸ்ரீ)

# பேச்சுவார்த்தைக்கு வருமாறு இராணுவ ஆட்சியாளர்களுக்கு சூகி அழைப்பு




(யாங்கோன்)



மியன்மார் நாட்டில் வீட்டுக்காவலில் பல ஆண்டு களாக இருந்து கடந்த சனிக்கிழமை விடுதலையான எதிர்க்கட்சி தலைவர் சூகி பேச்சுவார்த்தை நடத்த வாருங்கள் என்று இராணுவ ஆட்சியாளர்களுக்கு அழைப்பு விடுத்து இருக்கிறார். மியன்மார் நாட்டில் பல ஆண்டுகளாக நடந்து வரும் இராணுவ ஆட்சிக்கு எதிராக போராடி வருபவர் சூகி. இவர் ஜனநாயக ஆட்சி கோரி போராடி வருகிறார். அவரை ஆட்சியாளர்கள் வீட்டுக்காவலில் அடைத்து வைத்து இருந்தனர். கடந்த சனிக்கிழமை அவரது தண்டனை காலம் முடிவடைந்தது. இதைத் தொடர்ந்து அவர் விடுதலையானார். அவர் நேற்று முன்தினம் தன்கட்சி அலுவலகத்துக்கு வந்தார். அங்கு திரளாகக் கூடி இருந்த தொண்டர்கள் மத்தியில் முதன் முதலாக அவர் பேசினார். அப்போது அவர் கூறியதாவது,

வீட்டுச்சிறையில் இருந்த போது நான் தினமும் 6 மணி நேரம் தொலைக்காட்சி பார்த்து வந்தேன். இதைப் பார்த்ததன் மூலம் மக்களுக்கு என்ன தேவை என்பதை புரிந்து கொண்டேன். நமக்கு என்ன தேவை என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். பிறகு அதை பெற நேர்மையான வழியில் பாடுபடவேண்டும். ஜனநாயக சுதந்திரத்திற்கு அடத்தளம் பேச்சு உரிமை தான். நீங்கள் அரசியலில் இல்லாவிட்டாலும் அரசியல் உங்களைத் தேடிவரும். என்னை சிறையில் வைத்தவர்கள் மீது எனக்கு வருத்தம் கிடையாது. அவர்கள் மீது கோபமும் கிடையாது. இவ்வாறு சூகி கூறினார்.

அப்போது ஒரு நிருபர் சுப்ரீம் தலைவர் ஜெனரல் தான்ஷ்வேக்கு நீங்கள் விடுக்கும் செய்தி என்ன என்று கேட்டார். அதற்கு பதில் அளித்து பேசிய சூகி என்னுடன் பேச்சுவார்த்தை நட த்த வாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டார். அதன் பிறகு அவர் தொடர்ந்து பேசுகையில் , எது சரியானதோ அதற்காக நாம் நிமிர்ந்து நிற்க வேண்டும். அரசியலில் உறுதியாக நாம் நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (ஸ்ரீ)



ஆசிய-பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாடு ஜப்பானின் யோகேஹமாவில் நடைபெற்று வருகிறது. இதில் கலந்து கொள்ள வந்த பெருநாட்டு ஜனாதிபதி ஆலன்கார்ஸியாவை (இடது), அந்நாட்டு பிரதமர் நௌட்டோகான் வரவேற்றார்.


உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆசிரியர்களை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலனை சங்க அங்கத்தவர் ந.தேவபாலன் மாலையிட்டு கௌரவிப்பதனையும் ஆசிரியர்களுக்கு தேவ ஆசிவேண்டி போதகர் ந.தேவபாலன் பிரார்த்திப்பதனையும் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் க.விஜயவாசன் உரையாற்றுவதனையும் பாடசாலை அதிபர் அருகில் அமர்ந்திருப்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(அல்வாய்)

வடமராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை யா/ புலோலி மெ.மி.த.க.பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது என வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் (திட்டமிடல்) சி.நந்தகுமார் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

## மர நடுகைக்காக உழப்பட்ட நிலத்திலிருந்து ஷெல் மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை வளாகத்தில் மர நடுகைத் திட்டத்திற்காக உழவு இயந்திரத்தின் மூலம் உழப்பட்ட நிலத்தில் வெடிக்காத நிலையில் உள்ள ஒரு நீளமான ஷெல் மீட்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து விழாவிற்கு வருகை தந்த இராணுவ அதிகாரிகள் அவ் இடத்தில் பொதுமக்கள் செல்லாதபடி எச்சரிக்கை குறியீடு இட்டுச் சென்றுள்ளனர். (ஸ்ரீ-29)




## கலைஞானி பட்டம் வழங்கி கௌரவிப்பு

(சாவகச்சேரி)

பாலாவி வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த துரைசிங்கம் குமரநாதன் என்ற சிற்பக் கலைஞருக்கு கலைஞானி என்ற பட்டத்தை தென்மராட்சிப் பிரதேச செயலாளர் திருமதி அ.சாந்தசீலன் வழங்கிக் கௌரவித்தார்.

நேற்று முன்தினம் கச்சாய் பொது நூலகத்தில் நடைபெற்ற தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வில் நூலகத்தில் வள்ளுவர் சிலை அமைக்கப்பட்டதை பாராட்டியே இப்பட்டம் வழங்கப்பட்டது. (ஸ்ரீ-29)

## வீதியை புனரமைத்து தருமாறு மனு கையளிப்பு

(பொலிகண்டி)

அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து ஆவரங்கால் - வல்லை வீதியுடன் இணையும் வீதி சீரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

இவ் வீதியானது யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கும் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இராசவீதி ஊடாக பயணிக்கும் அரச மற்றும் தனியார் ஊழியர்கள் பயன்படுத்தும் பிரதான வீதியாக உள்ளது.

அதுமட்டுமன்றி பெருமளவான மாணவர்களும் இவ் வீதியைப் பயன்படுத்துகின்றனர். பருவமழை ஆரம்பிக்கும் இத் தருணத்தில் இவ் வீதியில் தண்ணீர் தேங்கி பயணிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தி வருகிறது.

இதுபற்றி இவ் வீதியால் பயணிக்கும் ஊழியர்கள் கருத்துத் தெரிவிக்கையில், தாம் இதுதொடர்பாக அச்சுவேலி பிரதேச சபையில் மனு ஒன்றைக் கையளித்துள்ளனர். எனவே உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-48)

## தேசிய மரநடுகைத் திட்டம் நேற்று யாழில் ஆரம்பம்

(கொழும்புத்துறை)

யாழ்.மாவட்டத்தில் 50ஆயிரத்து 400 மரங்களை நடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

இதற்கென மேலும் 10 மில்லியன் ரூபாவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கீடு செய்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை 10.07 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சுற்றாடல் அமைச்சு ஏற்பாடு செய்துள்ள ஜனாதிபதியை கௌரவிக்கும் முகமாக தேசிய மரநடுகைத் திட்ட நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி கலந்துகொண்டு முதல் மரங்களை நடுகை செய்தனர்.

இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உரையாற்றுகையில்,

யாழ்.மாவட்டத்தை பச்சை வளம் நிறைந்ததாக ஜனாதிபதியின் 2ஆவது பதவியேற்பு நிகழ்வை முன்னிட்டு 11 இலட்சம் மரங்களை 11 நிமிடத்தில் இலங்கை ரீதியில் நடுகை செய்யப்படுகிறது.

அதாவது யாழ்.மாவட்டத்தில் நடுகை செய்கின்ற மரங்களான அலங்கார வேம்பு, பனை,தென்னை, தேக்கு உட்பட பல்வேறு வகையான மரங்கள் நடப்படுவதாக தெரிவித்தார்.

இதில் நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா உட்பட சுகாதார அமைச்சு அதிகாரிகள், பிரதேச செயலர்கள், கிராமசேவகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-51)

## இரு வெவ்வேறிடங்களில் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயம்

(கரவெட்டி)

இரு வெவ்வேறு விபத்துச் சம்பவங்களில் படுகாயமடைந்த இரு இளைஞர்கள் பலத்த காயங்களுடன் சிகிச்சைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவங்ள் கடந்த 13ஆம் திகதி இரவு 7 மணிக்கு திக்கம் இராணுவ முகாமுக்கு அருகாமையில் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிள் துவிச்சக்கரவண்டியுடன் மோதிய விபத்தில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த அல்வாய் வடமேற்கைச் சேர்ந்த கிருஷ்ணன் தவக்குமார் (வயது -37) என்ற இளைஞரே தலையிலும் காலிலும் படுகாயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மற்றுமொரு சம்பவத்தில் அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடியில் மோட்டார் சைக்கிள் நாயுடன் மோதிய விபத்தில் அல்வாய் தெற்கைச் சேர்ந்த குணரத்தினம் சீத்தாராம் (வயது-19) என்ற இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

இவ் இரு இளைஞர்களும் சிகிச்சைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-29)

## ஒடுங்கிய நிலையில் தோற்றமளிக்கும் வீதி; பாதையை விட்டு விலகும் பேருந்துகள்

### பயணிகள் பெரும் அவலத்தில்

(பொற்பதி)

பொற்பதி குடத்தனை வீதியானது குன்றும் குழியுமாக புனரமைக்கப்படாது காணப்படுகிறது. இவ்வீதியானது இரு பக்கமும் உடைந்து ஒழுங்கிய நிலையில் காணப்படுகிறது.

இதன்காரணமாக இவ் வீதியால் கனரக வாகனங்கள் மற்றும் பேருந்துகள் பயணிக்கும் போது துவிச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவற்றில் பயணம் செய்வோர் இறங்கி நின்று வாகனங்கள் சென்ற பின்பு மீண்டும் பயணத்தை தொடர வேண்டிய நிலை உள்ளது. இதனால் பயணிகளும் பொதுமக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை நேற்றுக் காலை 6 மணியளவில் பொற்பதியில் இருந்து புறப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகியது.

இந்தப் பேருந்திலேயே அரசாங்க ஊழியர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள், மாணவர்கள், பொது மக்கள் எனப் பெரும்பாலானோர் பயணம் செய்கின்றனர்.

நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற இச்சம்பவத்தால் மாணவர்களும் பெருந்தொகையான பொதுமக்களும் அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்களும் நீண்ட தூரம் நடந்து சென்று வேறு பேருந்துகளில் பயணம் செய்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இதனால் இவ்வீதியூடான போக்குவரத்து சிறிதுநேரம் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் வீதியைக் கூடிய விரைவில் செப்பனிட்டு இவ் வீதி ஊடான போக்குவரத்தை சீராக நடைமுறைப்படுத்துவதற்கு முன்வர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-64)

## வறுமைக்கோட்டின் கீழுள்ள சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

(சாவகச்சேரி)

வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள தென்மராட்சிப் பிரதேச சிறுவர்களுக்கு வங்கி சேமிப்பு புத்தகமும் கற்றல் உபகரணங்களும் வழங்கும் நிகழ்வு நாளை புதன் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி கச்சாய் வீதி நாவலடிப் பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெறும் சமூகநல விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் யோ.ஜெயக்குமார் தலைமையில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் சமய விழாவில் சமயத் தொண்டர் வே.கெ. தனபாலன் மற்றும் ஓதுவார் திருமதி கு. கமலாதேவி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளார்.

மாலை நிகழ்வுகளிற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலாளர் திருமதி அ.சாந்தசீலன் கலந்துகொள்ளவுள்ளார். இவ்விழாவில் பல பிரமுகர்களும் கலந்து விழாவை சிறப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் தென்மராட்சி கிழக்கு முன்பள்ளி மாணவர்களின் கலைநிகழ்வு களும் இடம்பெறவுள்ளதாக விழா ஒருங்கிணைப்பாளர் எஸ்.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2-29)

அழுத கண்ணுடையவன் ஒருவனுக்குத்தான் கண்ணீரின் மொழி தெரியும்.

-ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கண்ணீர்க் காவியத்தின் வரலாற்றுப் பதிவாகிய சாட்சியம்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைப் பணி, யாழ்ப்பாணத்திலும் முடிபடைந்துவிட்டது.

வன்னி யுத்தத்தின் போது நடந்த கொடூரங்களை கேட்டறிந்து கொள்வதற்காக இந்த ஆணைக் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

ஆணைக்குழுவில் இடம்பெற்றிருந்தவர்கள் இந்தக் குழுவில் இடம்பெறாமல் இருந்திருக்கலாம் என்று நினைக்கும் அளவிற்கு கண்ணீர்க் காவியமாய் சாட்சியங்கள் அமைந்திருந்தன.

என் பிள்ளை எங்கே? என் கணவர் எங்கே? அம்மாவை இழந்தேன், அப்பாவைப் பறிகொடுத்தேன், அண்ணாவைக் காணவில்லை, தம்பியைத் தேடுகின்றோம், கடவுளே! எத்தனை துயரம். இனப் பேதமை, மனித நேயமில்லாத மானிடச் சமூகம், எத்தனை துயரத்தை நமக்குத் தந்துவிட்டன.

சாட்சியங்களைக் கேட்டவர்கள் நிச்சயமாக மனிதத்திற்காக அழுதிருப்பார்கள். இருந்தும் துரதிர்ஷ்டமாக ஆணைக்குழுவின் அதிகாரங்களும் எல்லைகளும் வரையறுக்கப்பட்டுள்ளன.

அவர்கள் தங்களால் முடிந்தளவு பதிவு செய்து ஆயிரக்கணக்கான பக்கங்களில் அறிக்கை தயாரித்து அரசிடம் வழங்குவர். அதனோடு அவர்களின் பணி முடிந்தாகிவிடும்.

தாம் அனுபவித்த துன்பங்கள், துயரங்கள், அழுகைகள், சோகங்கள், மனித பரிதாபங்கள் அனைத்தையும் எழுத்தில் வடித்து விடுவது முடியாத காரியம். எனவே அவர்களால் வழங்கப்படும் அறிக்கைகள் வன்னி யுத்தத்தில் பட்ட மிகப் பெரும் கொடூரத்தின் சிறு அளவை மட்டுமே பிரதிபலிப்பதாக இருக்கும்.

இதற்கு மேலாக பாதிக்கப்பட்ட எல்லோரும் ஆணைக்குழு முன் சாட்சியமளித்தார்களா என்றால் ஒரு வீதம் கூட இல்லை என்பதே நிஜம்.

நிலைமை இதுவாக இருக்கையில், ஆயிரக்கணக்கான பக்கங்களில் இருக்கக்கூடிய அந்த அறிக்கையை வாசித்தென்பதும் சாத்தியமான விடயமன்று.

ஆக! கண்ணீர்க் காவியத்தின் ஒரு சாட்சியமாக மட்டுமே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைகள் இருக்கப்போகின்றது என்பது தெளிவு.

சில வேளைகளில் ஆணைக்குழுவின் தலைவராக இந்த நாட்டின் ஜனாதிபதி இருந்து சாட்சியங்களை செவிமடுத்திருப்பாராயின் மக்களின் கோரிக்கைகளுக்கு ஏதேனும் தீர்வு கிடைத்திருக்குமென நம்பலாம். ஆனால் அது நடக்கவில்லை.

இந்த நாட்டில் சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்து போவதற்கு நாட்டின் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியும், விடுதலைப் புலிகளின் தலைவரும் நேருக்கு நேர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தாமையே காரணம் என்ற நியாயப்பாடுகளின் மத்தியில்,

ஆணைக்குழுவிலும் இந்த நாட்டின் ஜனாதிபதி இடம்பெறாமையானது,

சாட்சியங்கள் எதிர்பார்த்த எதனையும் பெற்றுத்தருவதை உறுதி செய்வதாக இல்லை என்றே கூறவேண்டும்.

# கைது செய்யப்பட்டவர்கள் எங்கே? முடிபு தெரியும்வரை போராடுவோம்

## யாழ்ப்பாணத்தில் ரில்வின் சில்வா

(யாழ்ப்பாணம்)

யுத்தம் நிறைவடைந்து ஒன்றரை வருடத்திற்கு மேலாகிவிட்டது. ஆனால் கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்பாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது. அவர்களை விடுவிக்கும் நோக்கத்தோடு நாம் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றோம்.

கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்பாக அரசாங்கம் நல்லதொரு முடிபு எடுக்கத்தவறினால் எமது போராட்டம் தொடரும்.

யாழ். பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்பாக அவர்களின் உறவினர்களுக்கு அரசாங்கத்தால் நம்பிக்கையான முடிபுகள் எதுவும் கூறப்படவில்லை. பிள்ளைகளையிழந்த பெற்றோர்கள் அங்கலாய்த்த வண்ணம் உள்ளனர். அவர்களுக்கு அரசாங்கத்தினரால் தீர்க்கமான முடிபு அறிவிக்கப்படவேண்டும்.

பிள்ளைகளைப் பறிகொடுத்து ஏக்கத்தோடு நிற்கும் தாய்மார்க்கு இந்த அரசாங்கம் கூறவிரும்புவது என்ன? கணவனையிழந்து தவிக்கும் விதவைகளை யார் பாதுகாப்பார்? அங்கவீனர்களை பராமரிக்க யார் முன்வருவார்?

ஜனநாயக ரீதியில் ஆட்சியென்று கூச்சலிடும் அரசாங்கத்தினரின் அராஜகச் செயலால் எமது தோழர்கள் தாக்கப்பட்டுள்ளனர். இத்தகைய நடவடிக்கைகள் மூலம் எம்மை அச்சுறுத்த நினைக்கும் அவர்களுக்கு நான் கூறுவது, எந்த அச்சுறுத்தலுக்கும் அஞ்சப்போவதில்லை. இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பமே. இத்தகைய அராஜகம் மீண்டும் தொடர்ந்தால் எமது போராட்டமும் தொடரும்.

தமிழர்கள் என்பதால்தான் எனது தோழர்கள் தாக்கப்பட்டனர். அவர்கள் அரசிற்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடவில்லை. இருந்தும் தாக்கப்பட்டனர். ஜனநாயகம் நிலைநாட்டப்படவில்லை என்பதற்கு இந்த நடவடிக்கை சான்றாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# வலி.வடக்கில் மீள் குடியமர்வோரை மீண்டும் பதிவு செய்யுமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு பிரதேச செயல பிரிவுக் குட்பட்ட இளவாலை வடக்கு, வட மேற்கு மற்றும் வித்தகபுரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் மீள்குடியமர்வதற்கு பதிவு செய்த குடும்பங்களை மீண்டும் தமது பதிவுகளை உறுதிப்படுத்துமாறு யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இன்று 16 ஆம் திகதி முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை இவ் உறுதிப்படுத்தலை மேற்கொள்ளலாமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யாழ்.மாவட்டத்தில் இதுவரை மீள்குடியமர்வு நடவடிக்கை இடம்பெறாத பிரதேசங்களில் மக்களைப் படிப்படியாக மீள்குடியமர்த்தி வரும் தொடர் நடவடிக்கையின் ஒரு கட்டமாக தெல்லிப்பளை பிரதேசத்திலுள்ள இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு மற்றும் வித்தகபுரம் கிராம சேவையாளர் பிரிவு மக்களை குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மேற்படி கிராம சேவையாளர் பிரிவுகளில் மீள்குடியமரப் பதிவு செய்த குடும்பங்கள் மீண்டும் தமது பதிவுகளை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இன்று 16ஆம் திகதி முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை உறுதிப் படுத்திக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் இக் கிராம சேவையாளர் பிரிவுகளில் மீள்குடியமரவுள்ள மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை ஏற்படுத்துவதற்காக அங்கு செல்லவுள்ள அரசதிணைக்களங்கள் தாங்கள் சேவைகளில் ஈடுபடுத்தவுள்ள தமது உத்தியோகத்தர்களது பெயர், தேசிய அடையாளஅட்டை இலக்கம், வாகன இலக்கங்கள், சாரதி பெயர் விபரம் ஆகியவிபரங்களையாழ்.மாவட்டசெயலக புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலக திட்டப்பணிப்பாளர் அலுவலகத்தில் இன்று உடனடியாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

மேலும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது செயற்பாடுகளான தற்காலிக, நிரந்தர வதிவிடமமைத்தல், குடி நீர், மலசல கூட வசதிகளைப் புதிதாக அமைத்தலும் திருத்துதலும் வாழ்வாதாரச் செயற்பாடுகளை மேற்படி கிராம சேவையாளர் பிரிவுகளில் மீள்குடியமரும் மக்களில் மீள்குடியமரும் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்கான தங்கள் சுருக்கமான திட்ட முன்மொழிவுகளை, திட்டமிடல் பணிப்பாளர், யாழ்.மாவட்டதிட்டமிடல் செயலத்திற்கு எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னராக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

இவ்வாறு யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார். (ந)

# ஒருங்கிணைந்த புலனாய்வுப் பிரிவின் தலைவராக பேராசிரியர் ரொஹான்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் கீழ் புதிதாக உருவாக்கப்படவுள்ள ஒருங்கிணைந்த புலனாய்வுப்பிரிவின் தலைவராக சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ரொஹான் குணரத்தின நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

அதற்கு முன்மொழிவை இராணுவத்தின் புலனாய்வுப்பணிப்பாளர்கபிலஹெந்தாவித்தாரண முன்மொழிந்ததுடன் பேராசிரியர் ரொஹான் குணரத்தினவும் இணக்கம் தெரிவித்துள்ளார்.

குறித்த புலனாய்வு அமைப்பானது சர்வதேச மட்டத்தில் புலிகள் அமைப்பின் செயற்பாடுகளை முடக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் அதன் முக்கியமான பொறுப்புக்களில் பெரும்பாலும் சிவில் நபர்களே நியமிக்கப்படவுள்ளனர்.

பேராசிரியர் ரொஹான் குணரத்தின தற்போதைக்கு சிங்கப்பூர்தேசிய பல்கலைக்கழகத்தின் பயங்கரவாதம் தொடர்பான கற்கைநெறிகளுக்கான பேராசிரியராகக் கடமையாற்றி வருகின்றார்.

பிரஸ்தாப புலனாய்வுப்பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்படவிருந்த ஜனாதிபதி செயலக தமிழ் ஊடகப் பிரிவின் முஸ்லிம் அதிகாரி ஒருவர் அரசாங்கத்துடன் முரண்பட்டு நாட்டைவிட்டுத் தப்பியோடியுள்ள நிலையில் தற்போதைக்கு லண்டனில் வாழும் தமிழர் ஒருவர் அதற்காக நியமிக் கப்படவுள்ளதாகவும் தெரிகின்றது.

லண்டன் தமிழ் பிரமுகரைச் சந்திப்பதற்கும், அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் என்று அவரால் பட்டியலிடப்பட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்து அரசாங்கத்தின் ஆதரவாளர்களாக மாற்றிக் கொள்ளவதற்கும் போராசிரியர் ரொகான் குணரத்தின அண்மையில் லண்டனுக்கான விஜயமொன்றைமேற்கொண்டிருந்ததாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. (ந-5)

# சுவாமி விவேகானந்தரின்

## சிக்காக்கோ சொற்பொழிவுகள்



எல்லையற்றது என்ற கருத்தை நீலவானின் அல்லது கடலின் தோற்றத்துடன் தொடர்புபடுத்தியே பார்க்க வேண்டியுள்ளது.மன அமைப்பு விதி அவ்வாறு தான் செயற்படுகிறது. அவ்வாறே புனிதம் என்றால் சர்ச், பள்ளிவாசல் அல்லது சிலுவை போன்ற உருவங்களுடன் இணைத்துப் பார்ப்பதுதான் இயல்பானது. இந்துக்களும் தூய்மை, உண்மை, எங்கும் நிறைந்த நிலை ஆகியவை பற்றிய கருத்துக்களை பல்வேறு உருவங்களுடனும், தோற்றங்களுடனும் தொடர்புபடுத்தியுள்ளனர்.ஆனால் ஒரு வித்தியாசம்.சிலர் சர்ச்சின் உருவ வழிபாட்டுடன் தங்கள் வாழ்க்கை முழுவதையும் இணைத்துக்கொண்டு, அதற்கு மேல் வளராமல் நின்று விடுகிறார்கள்.அவர்களைப் பொறுத்தவரை, மதம் என்றால் சில கோட்பாடுகளை ஒப்புக்கொள்வது,பிறருக்கு உதவி செய்வது என்பவை மட்டும்தான்.இந்துவின் சமயமோ தெய்வத்தை நேரடியாக உணர்வது.தெய்வத்தை உணர்ந்து, மனிதன் தெய்வமாக வேண்டும்.திருவுருவங்கள், கோவில்கள்,சர்ச்சுகள், நூல்கள் இவையெல்லாம் ஆன்மீக வாழ்க்கையின் குழந்தைப் பருவத்தில் இருக்கும் மனிதனுக்கு உதவிகள், ஆதாரங்கள். ஆனால், அவன் இன்னும் மேலே மேலே முன்னேற வேண்டும்.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய அபிவிருத்தி திட்டங்கள்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு 50 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இம் மாவட்டத்தில் ஐம்பது கோடி ரூபா செலவில் உள்ளூராட்சி மற்றும் உட்கட்டமைப்பு தொடர்பான பல்வேறு பாரிய அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு நிகழ்வாக முல்லைத்தீவில் வீதி அபிவிருத்திப் பணிகளுக்கான நினைவுக் கல்லை நாமல் ராஜபக்ஷ எம்.பி. திரைநீக்கம் செய்து ஆரம்பித்து வைத்தார்.

அத்துடன் டக்ளஸ் தேவானந்தா இதில் கலந்துகொண்டார்.

யுத்தத்தின் போது கடுமையாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் வெகு விரைவில் முழுமையான சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தும் பொருட்டும் மக்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் பெற்றுக்கொடுக்கும் வகையிலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 115 உள்ளூர் வீதிகளை புனரமைக்கும் திட்டத்திற்கு 393 மில்லியன் ரூபாவும் பிரதேச சபைகளை நிர்மாணிப்பதற்கான ஒன்பது கட்டுமான பணிகளுக்கு 71 மில்லியன் ரூபாவும் ஏனைய நிர்மாண பணிகளுக்கு 36 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்டத்திற்கான பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே. உதயராஜா தெரிவித்துள்ளார்.

வடக்கின் வசந்தம் வட மாகாணத்திற்கான அவசர புனரமைப்புத் திட்டம் ஆகியவற்றின் ஊடாக வடமாகாண சபை இந்த அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இத் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 115 உள்ளூர் வீதிகள் முழுமையாக புனரமைக்கப்படவுள்ளதுடன் புதுக்குடியிருப்பு, துணுக்காய், கரைத்துறைப்பற்று மற்றும் பாண்டியன் குளம் ஆகிய நான்கு பிரதேச சபைகளுக்கான அலுவலகங்களும் செம்மாலை கொக்கிளாய் பிரதேசத்திற்கான உப பிரதேச சபை அலுவலகங்களும் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளன.

துணுக்காய் பிரதேச சபைக்கு 2 கோடி 80 இலட்சம் ரூபாவும் கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கு ஒரு கோடி 80 இலட்சம் ரூபாவும் மாந்தை கிழக்கு பிரதேச சபைக்கு ஒரு கோடி 20 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# சுவரொட்டி ஒட்டியவர்கள் கைதாகி விடுதலை

(கொழும்பு)

ஜே.வி.பியின் 21 ஆவது கார்த்திகை வீரர்கள் தினம் தொடர்பாக பொல்ஹேன் கொடவில் சுவரொட்டிகளை ஒட்டியபோது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரை கொழும்பு மேலதிக நீதவான் பிரஹர்ஷிகா ரணசிங்க நேற்று விடுதலை செய்தார்.

குறித்த பிரதேசம 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பெருந்தெருக்கள் சட்டத்தின் கீழ்வராது எனத் தெரிவித்த நீதவான், அச் சட்டத்தை மீறியதாக பொலிஸாரினால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை நிராகரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# பரிசளிப்பு விழா

(இருபாலை)

நீர்வேலி சி.சி.த.க.கலவன் பாடசாலை பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் இ.பசுபதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கோப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சித்திரவடிவேலு, கௌரவ விருந்தினர்களாக சமாதான நீதவான் கே.தர்மலிங்கம், ஓய்வு பெற்ற வங்கி உத்தியோகத்தர் ஏ.இராசநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-136)


# தேசிய மரநடுகை நிகழ்வு

(வல்வெட்டித்துறை)

யாழ்.மாவட்டத்தில் மரநடுகை வளர்ச்சித் திட்டத்தினையும் கிராமிய மட்ட அபிவிருத்தி திட்டத்தினையும் மேற்கொள்ளும் நோக்குடன் வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய மரநடுகை நிகழ்வு இன்றும் நாளையும் 17, 18 ஆம் திகதிகளிலும் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம், பிரதேச செயலகங்கள், கிராம, சனசமூக நிலையங்கள், கோட்டக் கலவி அலுவலகங்கள், ஆசிரிய பயிற்சி நிலையங்கள் என்பவற்றில் மேற்கொள்ளப்படவுள்ளது. (ஸ்ரீ-63)

# பௌத்தமதத்தை பேணிப் பாதுகாப்பதில் — இலங்கை பெருமிதமடைகிறது —

## பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

பௌத்த மதத்தை பேணிப் பாதுகாப்பதில் இலங்கை பெருமிதமடைவதாக பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு சக்திகளின் தலையீடுகள் அழுத்தங்களுக்கு மத்தியில் இரண்டாயிரம் வருடங்களுக்கு மேல் பௌத்த மதம் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருவதாகவும் இலங்கையே பௌத்த மத விழுமியங்கள் ஏனைய ஆசிய நாடுகளுக்கு பரப்பியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

25ஆவது பௌத்த மத மாநாட்டில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிணக்குகள் நிறைந்த இந்த உலகில் பௌத்த மதக் கொள்கைகள் சிறந்த படிப்பினைகளை வழங்கி வருவதாகவும் கௌதம புத்தரின் அறவழிக் கொள்ளைகளைப் பின்பற்று வதன் மூலம் அனைவரும் நன்மைகளை அடையமுடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# நாடு முழுவதும் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

லெப்டோஸ் பைரோஸிஸ் எனும் எலிக் காய்ச்சல் நாடளாவிய ரீதியில் தீவிரமாக பரவி வருகின்றது என தொற்றுநோய் தடுப்புப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

இவ் வருடம் எலிக்காய்ச்சலினால் 89 பேர் உயிரிழந்துள்ளதாகவும் நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 627 பேர் இந் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் மேற்படி பிரிவின் புள்ளிவிபர அறிக்கை தெரிவிக்கின்றது.

எலிக்காய்ச்சலினால் கடந்த ஒக்டோபர் மாதத்தில் 607 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் கொழும்பு மாவட்டத்தில் அதிகளவு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகிறது. வயல்வெளிகளிலிருந்து எலிக்காய்ச்சல் நேரடியாகப் பரவுகின்றது. இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயிகளாவர்.

இது தொற்றுநோய் அல்ல. ஆனால் ஒரு மிருகத்திலிருந்து இன்னொரு மிருகத்திற்குப் பரவும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# யாழ்.போதனா வைத்தியசாலை சுத்திகரிப்பு பணியாளர்களது பணி நிறுத்தம் கைவிடப்பட்டது

யாழ். போதனா வைத்தியசாலை சுத்திகரிப்புப் பணியாளர்கள் நேற்று முன்தினம் முதல் மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தப் போராட்டம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கிணங்க நேற்று கைவிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை முதல் தனியார் நிறுவன சுகாதாரப் பணியாளர்கள் சம்பள உயர்வுகோரி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இதனையடுத்து வைத்தியசாலையின் சுத்திகரிப்புப் பணிகள் இடம்பெறாமையினால் சுகாதாரச் சீர்கேடு நிலவியமை குறித்து அமைச்சரின் கனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இதனை அடுத்து நேற்று காலை யாழ். வைத்தியசாலைக்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புளோர் கெயார் என்ற தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமான சுத்திகரிப்பு ஊழியர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இதன்பிரகாரம் உங்களுக்கு நியாயம் கிடைக்க நிச்சயம் வழி ஏற்படுத்தப்படுமென்றும் மருத்துவமனையின் சுத்தமே பிரதான பணியாக இருப்பதனால் போராட்டத்தை கைவிட்டு உண்மையுடனும் அர்ப்பணிப்புடனும் நம்பிக்கையுடனும் வழமையான பணிகளிடம் கேட்டுக்கொண்டார்.

உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி விரைவில் தீர்வு காணப்படுமென்றும் நியாயத்தின் அடிப்படையில் நிச்சயம் முடிவு எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்ததைத் தொடர்ந்து சுத்திகரிப்புப் பணியாளர்கள் போராட்டத்தைக் கைவிட்டு தமது வழமையான பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையிலான குழுவினர் மீது நேற்று முன்தினம் இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் காயமடைந்தவர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டுள்ளதுடன் அவர்களுடன் கலந்துரையாடினார்.

இதேபோன்று அண்மையில் அளவெட்டிப் பகுதியில் இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த இளைஞரையும் அமைச்சர் பார்வையிட்டு அவருடனும் கலந்துரையாடியதுடன் படுகாயமடைந்தவரின் தந்தையாரிடம் நிலைமைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுடனும் அவர் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்கால ஏற்பை முன்னிட்டு "பசுமை நிறைந்த நாடு" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மரநடுகை நிகழ்வு யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிபர் வே.ஞானகாந்தன் நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# ஹயில் இரட்டைச்சதமடித்துத் தாக்குதல்

# மேற்கிந்தியத்தீவுகள் வலுவான ஆரம்பம்

## இலங்கைப் பந்துவீச்சாளர்கள் திணறல்



(காலி)

கிறிஸ் ஹயிலின் அதிரடி இரட்டைச் சதத்தின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்றைய முதல்நாள் ஆட்டத்தில் முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களையிழந்து 362 ஓட்டங்களைக் குவித்தது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி மூன்று டெஸ்ட், 05 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று காலியில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஹயில்-பாரத் ஜோடி சிறப்பான அடித்தளமமைத்தது.

இதில் கிறிஸ் ஹயில் 61 பந்துகளிலும், பாரத் 82 பந்துகளிலும் அரைச்சதத்தைப் பூர்த்திசெய்ய மேற்கிந்தியத்தீவுகள் 100 ஓட்டங்களை எட்டியது.

எனினும் பாரத் 86 பந்துகளில் (08 பவுண்டரிகள் உட்பட) 50 ஓட்டங்களை எடுத்தபோது ரான்டீவின் பந்துவீச்சில் மஹேல ஜெயவர்த்தனாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக ஹயிலுடன் இணைந்த டரன் பிராவோ நிதானமாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தார்.

மறுமுனையில் கிறிஸ் ஹயில் 116 பந்துகளில் தனது 13 சதத்தைப் பூர்த்தி செய்து கைகொடுக்க மேற்கிந்தியத் தீவுகள் அணி 200 ஓட்டங்களைத் தாண்டியது.

இந்த ஜோடியின் இணைப்பாட்டத்தைப் பிரிக்க இலங்கை அணித்தலைவர் சங்கக்கார களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்தபோதும் பலனளிக்கவில்லை.

இதில் அறிமுகவீரர் டரன் பிராவோ 133 பந்துகளில் தனது முதலாவது போட்டியில் கன்னி அரைச்சதத்தைப் பூர்த்திசெய்தார்.

இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 196 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது டரன் பிராவோ 159 பந்துகளில் (06 பவுண்டரிகள் உட்பட) 58 ஓட்டங்களை எடுத்து மெண்டிஸின் பந்துவீச்சில் சமரவீரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய சந்தர்ப்போல் நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் கிறிஸ் ஹயில் 221 பந்துகளில் தனது 3 ஆவது இரட்டைச்சதத்தை அடித்து அசத்த மேற்கிந்தியத்தீவுகள் அணி 350 ஓட்டங்களை எட்டியது.

இந்நிலையில் நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் இரண்டு விக்கெட்டுக்களையிழந்து 362 ஓட்டங்களை குவித்தது.

இதில் கிறிஸ் ஹயில் 214 ஓட்டங்களையும், சிவ்நாராயணன் சந்தர்ப்போல் 20 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளனர்.

பந்துவீச்சில் ரான்டீவ், மெண்டிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

# சமநிலையில் முடிந்த இறுதிப்போட்டி முடிபினை ஏற்காத இரசிகர்கள்

## நடுவருடன் முரண்பாடு

மானிப்பாய் இந்துக்கல்லூரி தனது நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு யாழ். மாவட்டப் பதினொரு பாடசாலைகளுக்கிடையில் உதைபந்தாட்டப்போட்டி நடத்தியது.

மேற்படி போட்டிகளின் இறுதிப் போட்டி நேற்று மாலை மின்னொளியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியினை எதிர்த்து இளவாலை சென்.ஹென்றியரசர் கல்லூரி மோதியது. விறுவிறுப்பாக இரசிகர்களின் உற்சாக வெள்ளத்தில் இறுதிப்போட்டி ஆரம்பமானது. ஆரம்பம் முதல் இரு அணி வீரர்களும் மிகவும் வேகமாக விளையாடினர்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி தனது முதல் கோலினைப் போட்டது. இதனால் ஆட்டம் மேலும் சூடுபிடித்தது. முதல்பாதி ஆட்டம் முடியும்போது ஆட்டம் 1:0 என்ற ரீதியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிபக்கம் இருந்தது. தொடர்ந்து இரண்டாவது பாதி ஆட்டத்தில் பதில் கோல் அடிக்கும் முயற்சியில் சென்.ஹென்றியரசர் கல்லூரி அணி மும்முரமாக ஈடுபட்டது.

இதற்கான பலன் ஆட்டம் முடியும் தருவாயில் சென்.ஹென்றியரசர் கல்லூரி அணிக்குக் கிடைத்தது. அத்துடன் ஆட்டம் முடிபடைந்தது. அந்தநேரம் நடுவர்கள் சென்.பற்றிக்ஸ் கல்லூரி இரசிகர்களினால்முற்றுகையிடப்பட்டனர்.

ஆட்டம் முடியவேண்டிய நேரத்திற்கு மேலதிகமாக நிமிடங்கள் வழங்கியதாக ரகளையில் ஈடுபட்டனர். இவர்களிடமிருந்து நடுவர்களை ஏற்பாட்டுக்குழுவினர் மீட்டுச் சென்றனர். முடிபில் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிபுற்றது என அறிவிக்கப்பட்டது.

3 ஆம் இடத்திற்காக ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரி- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய அணிகள் மோதின. போட்டி முழுவதும் ஆதிக்கம் செலுத்திய மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று 3 ஆம் இடத்தினை தட்டிச்சென்றது.

## நுணாவில்...

பாலசுந்தரம் விக்னேஸ்வரன் (வயது 29) என்ற இளைஞரே உயிரிழந்த வராவார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-29,7)

# மக்குலம் பொறுப்பான சதம் நியூசிலாந்து அணி முன்னிலை

## சதமடித்து அசத்தினார் ஹர்பஜன்

(ஹைதராபாத்)

பிரண்டன் மக்குலம் சதமடித்து அசத்த நியூசிலாந்து அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேரமுடிபில் 4 விக்கெட்டுக்களையிழந்து 237 ஓட்டங்களை எடுத்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 03 டெஸ்ட், 05 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் சமனிலையான நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 12ஆம் திகதி ஹைதராபாத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 350 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்றுமுன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேரமுடிவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 436 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்த துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஹர்பஜன் சிங் 105 பந்துகளில் தனது இரண்டாவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்து கைகொடுத்தார்.

இறுதியில் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 472 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஹர்பஜன் சிங் ஆட்டமிழக்காமல் 116 பந்துகளில் (7பவுண்டரிகள், 7 சிக்ஸ்சர்கள் அடங்கலாக) 111 ஓட்டங்களையும் சிறிசாந்த் 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் டானியல் விக்டோரி 5 விக்கெட்டுக்களையும் சௌத்தி 3 விக்கெட்டுக்களையும் மார்டீன் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 122 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடியது.

இதில் ஆரம்பத் துடுப்பாட்ட ஜோடி மைக்கின் தோஸ் மக்குலம் இணைந்து நியூசிலாந்து அணியை முன்னிலையாக்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 125 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தபோது மைக்கின் தோஸ் 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த குப்தில் 18 ஓட்டங்களுடனும் ரெய்லர் 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து நின்று துடுப்பெடுத்தாடத் தவறினார்.

தொடர்ந்து ரைடர் களமிறங்க மறு முனையில் பிரண்டன் மக்குலம் 132 பந்துகளில் தனது 6 ஆவது டெஸ்ட் சதத்தைப்பூர்த்திசெய்ய நியூசிலாந்து அணி 200 ஓட்டங்களை எட்டியது.

இதில் ரைடர் 20 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய வில்லியம்ஸன் நியூசிலாந்து அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிபில் 4 விக்கெட்டுக்களையிழந்து 237 ஓட்டங்களை எடுத்தது.



இதில் பிரண்டன் மக்குலம் 124 ஓட்டங்களுடனும் வில்லியம்ஸன் 12 ஓட்டங்களுடனும் ஆட்மிழக்காமல் களத்திலுள்ளனர்.

பந்து வீச்சில் ஒஜா 2 விக்கெட்டுக்களையும் சிறிசாந்த், ரெய்ணா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஐந்தாவதும் இறுதியுமான நாள் இன்றாகும்.

இந்நிலையில் நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 115 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலுள்ளது.

## யுத்த காலத்தில் நட...

அமைக்கப்பட்ட ஆணைக்குழு தனது விசாரணைகளை வட பிராந்தியம் முழுவதும் மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் கடந்த 4 நாட்களாக யாழ்ப்பாணத்தில் சாட்சியங்களை பதிவு செய்தது.

இதன்போது ஆயிரக்கணக்கான மக்கள் தமது சாட்சியங்களை வழங்கினர். கடத்தப்பட்டு காணாமல்போனோர், கடந்த காலங்களில் யுத்தம் தந்த படிப்பினைகள் போன்றவற்றையே மக்களின் கண்ணீர் கலந்த சாட்சியங்களாக பதிவு செய்யப்பட்டன. ஆணைக்குழுவின் முன்னால் 13 வயதுச் சிறுமி சாட்சியமளிக்கும் போது, தனது தந்தை இறுதிக்கட்ட யுத்தத்தின் போது உயிரிழந்து விட்டார். தாயார் சிறிய காயமுற்றதாகவும் சிகிச்சை வழங்குவதாகக் கூறி இராணுவத்தினர் தனது தாயை அழைத்துச் சென்றனர். இதுவரை தனது தாயார் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை. தனது தாயாரை தன்னுடன் சேர்த்து விடுமாறு தனது கோரிக்கையை சாட்சியமாக முன்வைத்தார்.

இவ்வாறு ஒவ்வொரு மக்களும் தமது சாட்சியங்களை பல்வேறு வகையில் கோரிக்கைகளாக முன்வைத்தனர்.

இவற்றை அறிக்கைகளாகவும் வாக்கு மூலங்களாகவும் பதிவு செய்த ஆணைக்குழு, சம்பவங்கள் தொடர்பில் தமிழ் மக்களிடம் பகிரங்கமான முறையில் ஆணைக்குழுவின் தலைவர் என்ற வகையில் மன்னிப்புக் கோர விரும்புவதாக தெரிவித்தார். (ந-7)

## வேலணை-அராலிச்...

மினிபஸ் வேலணை அராலிச் சந்தியில் லொறி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகி குடைசாய்ந்துள்ளது.

இதில் பயணம் செய்த பயணிகள் இருபது பேர்வரை காயமடைந்துள்ளனர். இவ்வாறு காயமடைந்தவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஐவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனையை சேர்ந்த ஜெயக்குமார் (வயது 35), அவரது மனைவி கௌரி (வயது 33), மகன் (வயது 03) ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருடன் நாரந்தனை மத்தி ஜெ.வசந்தகுமார் (வயது 40) மற்றும் மினி பஸ் நடத்துநர் இ.செந்தில் (வயது 30) ஆகிய 5 பேருமே யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துக் குறித்து ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ந-5)

## யுத்த நீதிமன்றமா....

பிரதம நீதியரசர் அசோக டி சில்வா, ஷிராணி பண்டாரநாயக்க, நிமால் காமினி அமரதுங்க, சலீம் மர்சூப் மற்றும் கே.ஸ்ரீபவன் ஆகிய நீதியரசர்கள் இந்த மனுவை பரிசீலனை செய்ய உள்ளனர்.

யுத்த நீதிமன்றம் தமது நாடாளுமன்ற சிறப்புரிமைகளை மீறியுள்ளதெனத் தெரிவித்து சரத் பொன்சேகா மேன் முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

குறித்த விடயம் தொடர்பில் மேன் முறையீட்டு நீதிமன்றினால் தீர்மானம் எடுக்க முடியாத காரணத்தினால் அந்த விடயம் குறித்து தெளிவுபடுத்துமாறு உயர் நீதிமன்றிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசியல் சாசனத்தின் அடிப்படையில் யுத்த நீதிமன்றை ஓர் நீதிமன்றமாக ஏற்றுக்கொள்ள முடியாதென எதிர்க்கட்சிகள் குற்றம்சுமத்தியிருந்தன.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிறப்புரிமைகளை யுத்தநீதிமன்றம் மீறிச் செயற்பட்டுள்ளதாக எதிர்க் கட்சிகள் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## யுத்தத்தின் போது சர...

கறிஞரின் நெறிப்படுத்தலின் கீழ் சாட்சியமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் போது சரணடையவரும் புலிகளாயினும், பொதுமக்களாயினும் அவர்களை நல்ல முறையில் நடத்துமாறு பாதுகாப்புச் செயலாளர் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

அதன் காரணமாக சரணடைய வந்த அனைவரையும் நல்லமுறையில் பொறுப்பெடுத்து குடிநீர் மற்றும் சிற்றுண்டிகள் வழங்கி அவர்களை உரிய இடங்களுக்கு அனுப்பி வைத்தோம்.

சிலர் வெள்ளைக் கொடியுடனும், பலர் கொடி இல்லாமலும், இன்னும் சிலர் கைகளைஉயர்த்திக்கொண்டும் எங்களிடம் சரணடைந்திருந்தனர்.

நாங்கள் அனைவரையும் சமமாகவே நடத்தினோம். சரணடைய வந்த எவரையும் சுட்டுக் கொல்லவில்லை. அத்துடன் சிவில் நபர்கள் யாரும் காயமடையக் கூடாது என்பதில் பாதுகாப்புச் செயலாளர் உறுதியாக உத்தரவு பிறப்பித்திருந்தார்.

ஆயினும் அந்த உத்தரவு யுத்தத்தில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படைகள் மற்றும் புலிகளுக்கு பொருந்தவில்லை.

யுத்த காலத்தில் எனக்கும் சரத் பொன்சேகாவிற்கும் இடையில் எதுவித மனஸ்தாபமும் இருக்கவில்லை. கடைசி அங்குல நிலம் மீட்கப்பட்ட செய்தியைக் கூட அவருக்குத்தான் தெரிவித்தேன். அது கேட்டு அவர் எனக்கு வாழ்த்துத் தெரிவித்தார் என்றும் சவேந்திர சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

## ஜே.வி.பியின் ஆர்ப்...

யில் ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த காணாமல்போனவர்களின் குடும்பத்தவர்கள் மற்றும் மனைவிமார் என நூற்றுக்கும் அதிகமானவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டம் முடிபுறும் நிலையில் அங்கு வந்த சிலர் கூழ் முட்டைகள் மற்றும் கற்களால் வீச முற்பட்டனர். இதனையடுத்து ஜேவிபியினரும் பொதுமக்களும் அங்கிருந்து கலைந்து சென்றுள்ளனர். படையதிகாரிகளும் பொலிஸாரும் பெருமளவில் பிரசன்னமாகியிருந்த நிலையில் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகவும் இந்த சம்பவம் நகரப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதனையடுத்து விருந்தினர் விடுதியில் தங்கியிருந்த ஜேவிபி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்களை வெளியேறுமாறு விடுதியின் உரிமையாளர் கோரியதனை அடுத்து அவர்கள் வெளியேறினர். இதனால் ஊடகவியலாளர் மாநாடும் ரத்துச் செய்யப்பட்டது. (ந-5)

## அடக்குமுறை அரசுக்கு...

யாழ்ப்பாணத்தில் பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று ஜே.வி.பியின் ஏற்பாட்டில் நாம் இலங்கையர் என்ற அமைப்பின் பெயரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சோமவன்ச அமரசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் காணாமல் போனோரின் உறவினர்களும் கலந்து கொண்டு தங்கள் பிள்ளைகளையும் உறவினர்களையும் மீட்டுத்தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

காணாமல்போனோரின் உறவினர்கள், காணாமல்போனோரின் புகைப்படங்களையும் அடையாளச் சான்றிதழ்களையும் ஏந்தியவாறு எங்கள் பிள்ளைகளை மீட்டுத்தாருங்கள்.

ஆண்டுக்கணக்காக காணாமல் போயிருக்கும் எங்கள் உறவினர்களை எங்களிடம் மீண்டும் ஒப்படைக்க வழி செய்யுங்கள். எங்களுக்கான பதிலை அரசாங்கம் சொல்ல வேண்டும் என்ற கோரிக்கைகளை கதறிய வண்ணம் விடுத்தனர்.

இதேவேளை எங்கள் சொந்தங்களை மீட்டுத்தாருங்கள் என்ற நீண்ட பதாகையில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச உட்பட அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் பலரும் கையொப்பம் இட்டனர்.

இதனையடுத்து அங்கு உரையாற்றிய ஜே.வி.பியின் தலைவர் மேலும் கூறியதாவது, மக்களின் அடிப்படை உரிமைகள் இன்று மறுக்கப்பட்டிருக்கின்றன. பல பிரச்சினைகள் தீர்வு காணப்படாமலேயே இருக்கின்றன. மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்க முடியாத நிலை நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ளது. நாம் இலங்கையர்கள் என்ற நிலையில் இந்த அரசாங்கத்தின் இவ்வாறான அடக்குமுறை போக்குக்கு எதிராக போராட வேண்டும்.

தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என்ற வேறுபாடுகளை களைந்துவிட்டு நாம் இலங்கையர் என்ற பொது அடையாளத்தோடு அடக்குமுறைக்கு எதிராக அணிதிரள்வோம். நேற்று முன்தினம் கூட யாழ்ப்பாணத்தில் மக்களுக்கு ஆதரவாக போராட முயன்றோரின் மீது அரசாங்கம் தாக்குதலை நடத்தியிருந்தது.

காணாமல் போனோரின் உறவினர்கள் ஆண்டுக் கணக்காக தங்கள் உறவுகளை தேடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கான பதிலை அரசாங்கம் கொடுக்கவில்லை. இதையெல்லாம் நாம் அனுமதிக்க முடியுமா என்று கேள்வி எழுப்பினார்.

**ரில்வின் சில்வா எம்.பியின் கருத்து**

இதனையடுத்து ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரில்வின் சில்வா உரையாற்றுகையில், மக்களின் ஜனநாயக உரிமைகள் இன்று அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கின்றன. நாடு முழுவதும் அடக்குமுறையின் கீழ் வந்துள்ளது. மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதில்லை. இதைப் பற்றியே பேசமுடியாத ஒரு நிலையை அரசாங்கம் உருவாக்கியிருக்கின்றது. அரசாங்கம் சரியாக நடக்குமானால் எதற்காகப் பயப்பட வேண்டும். அதனால் நாம் நாடு தழுவிய ரீதியில் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம் என்றார்.

**ராமலிங்கம் சந்திரசேகரன் எம்.பி.**

இதனையடுத்து உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரன் காணாமல்போனோரின் பிரச்சினைக்கு எந்தப் பதிலையும் தரத் தயார் இல்லாத அரசாங்கம் அதை கேட்கும் மக்களை அச்சுறுத்துகிறது. நாம் இலங்கையர் என்ற அடிப்படையில் நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து போராடுவோம். யாழ்ப்பாணத்தில் மக்கள் ஜே.வி.பியுடன் இணைந்து போராட ஆயத்தமாய் இருக்கிறார்கள்.

ஆனால் அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. அந்த அடிப்படையிலேயே எங்கள் உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அரசாங்கம் ஏற்பாடு செய்து தாக்கிவிட்டு மக்கள் தாக்கினார்கள் என்று சில ஊடகங்ள் மூலம் செய்தியை பரப்புகிறது. ஆனாலும் நாங்கள் ஓயமாட்டோம் என்றார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய ஜே.வி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் வீரராஜ் லலித்குமாரய, நேற்று முன்தினம் நடந்த தாக்குதல் அரசாங்கத் தரப்பின் ஏற்பாட்டின் படியே மேற்கொள்ளப்பட்டது என்று குற்றச்சாட்டினார். (ந-5)


## வந்துவிட்டது வெற்றித்தேர்வு

இலங்கை முழுவதும் சாதனை படைத்துவரும்

2010 -தரம் : 4 வெற்றித்தேர்வு- 12 ,13

தரம் : 9 ,10 ,11 ஆகிய வகுப்புகளுக்கான

இறுதிப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

(2870)

O/L சுகாதாரம் உடற்கல்வி வினா விடைப் புத்தகம்

யாழ் பூபாலசிங்கம், சுன்னாகம் துர்க்கா புத்தகசாலைகளில்


2011- தரம் : 4 தரம் : 5 வெற்றித்தேர்வு

தேவையான பாடசாலைகள் இப்போதே பதிவு செய்து கொள்ளலாம்

இதுவோர் வெற்றித்தேர்வு வெளியீட்டகத்தின் வெளியீடு

தொடர்புகளுக்கு : 0773126807 / 0212229016


## துயர் பகிர்கின்றோம்



எமது நிறுவன உத்தியோகத்தர்

**அமரர் ஜஸ்ரின் றேகன் றெனோல்ட்**

அவர்கள் 14.11.2010 அன்று அகால மரணமடைந்ததையிட்டு அவருக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் ஆத்மா இறைவனின் திருவடிகளில் ஆறுதல் அடைந்து நித்திய வாழ்வு கிடைக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து இவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் இவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கரித்தாஸ் - கியூடெக், யாழ்ப்பாணம். (சி-1632) இயக்குனரும், பணியாளர்களும்,

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 16.11.2010 இன்று நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டத்தைப் பெறும் எமது பத்திரிகையின் செய்தி ஆசிரியர் (News Editor)

**கடாட்சம் சதீபன்**

அவர்களை மேலும் பல பட்டங்களைப் பெற்று நல்வாழ்வு வாழ மனமுவந்த பாராட்டுக்களை தெரிவித்து வாழ்த்துகின்றோம்.

*Congratulations*

வலம்புரிக் குடும்பம்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.